633

19 AUG 191

மலர் 1

# ஞானோதயம்.

[illegible]
ஓர் நற்றமிழ்ப் பத்திரிகை.

(மாதந்தோறும் வெளிவரும்)

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.—திருக்குறள்.

காளயுக்தி ஆடி மீ
1918-ம் ஞு ஜூலை மீ

பொருளடக்கம். பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | 97 |
| 2. | ஆத்ம விசாரணை | 98 |
| 3. | ஜீவகாருண்யம் | 100 |
| 4. | பகவத்கீதை | 104 |
| 5. | ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவர் திருவாய்மொழி. | 105 |
| 6. | க்ஷத்திரிய நாடார்கள் கைத்தொழிற்சாலை | 107 |
| 7. | நாடார் மகாஜன சங்கம் | 108 |
| 8. | பெண்கல்வி | 109 |
| 9. | சுகாதாரம் | 115 |
| 10. | தற்கால இராஜியநிலைமையும் நாடார்களும் | 117 |
| 11. | தூத்துக்குடி காரப்பேட்டை | 119 |
| 12. | விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியாசாலை | 121 |
| 13. | கடம்பூர் நாடார் கல்விச்சங்கம் | 123 |
| 14. | புத்தகத்திறப்புகள் | 124 |
| 15. | பொதுவிஷயங்கள் | 125 |
| | …வல். | 126 |

…ாதிபர் :—சிவ. பெ. ராமலிங்க நாடார்

தூத்துக்குடி.

1918

JL
R6ணை11, 1118GN
N18·1·4.
21987

உ

# ஞானோதயம்.

இஃது கல்வி, ஞானம், பக்தி, நாகரீகம், பாஷாபிவிருத்தி, வியாபாரம், கைத்தொழில், விவசாயம், வைத்திய மாதிய பலவகைச் சாஸ்திர ஆராய்ச்சி, ஆசாரச் சீர்திருத்தம், பொது விஷயங்கள், பெண்கள் மாணவர்களுக் குறிய விசேஷ விஷயங்கள், நாவல்கள், முதலிய பல அரிய விஷயங்கள் அணிந்து வெளிவரும் ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. நாவல் முதலாதிய பல விஷயங்கள் இதில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப் பெறுமாதலால் நேயர்கள் சென்ற சித்திரை மாதத்திலிருந்தே சந்தா தாரராகச் சேர்ந்து பத்திரிகையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு சேரும் சந்தாதார்கள் தங்கள் தங்கள் முழுவிலாசங்களைத் தெளிவாய் எழுதியனுப்ப வேண்டும். இருப்பிடம் கிராமமாயிருந்தால், அது எந்த ஊர்த் தபாலாபீசைச் சேர்ந்தது என்ற விவரத்தையும் குறிப்பிட்டெழுதி யனுப்பவேண்டும்.

## விஷயதானம் செய்யும் விற்பனர்களுக்கு வேண்டுகை.

விஷயதானஞ் செய்வோர்கள், ஜாதி மத தூஷணை சாராது பத்திரிகையின் மேற்கூறிய நோக்கங்களை அநுசரித்த விஷயங்களைச் செவ்விதான தமிழ் நடையில் எழுதியனுப்புமாறு வேண்டுகிறோம்.

## சந்தா விபரம்.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| இந்தியா பர்மா சிலோன் ஆகிய இடங்களுக்குத் தபாற் கூலி யுள்பட ஒரு வருஷத்திற்கு ... ... | 2 | 0 | 0 |
| பினாங்கு சிங்கப்பூர் தென் ஆபிரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு தபாற்கூலி யுட்பட ஒரு வருஷத்திற்கு | 2 | 8 | 0 |
| தனிப்பிரதி ஒன்றுக்கு | 0 | 4 | 0 |

**ஒரு வருஷத்திற்குக் குறைந்த காலச்சந்தா கிடையாது.**

## விளம்பர விகிதங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாசத்திற்கு | ... | ... | ரூ. | 4 | 0 | 0 |
| அரைப்பக்கத்திற்கு | ஷை | ... ... | ரூ. | 2 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு | ஷை | ... ... | ரூ. | 1 | 0 | 0 |

எப்போதும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

**சிவ. பெ. ராமலிங்க நாடார்,**
ஞானோதயம் ஆபீஸ்,
**தூத்துக்குடி.**

உ
கடவுள் துணை.

# ஞானோதயம்.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"—திருவள்ளுவர்.

மலர் I | காளயுக்தி௵ ஆடி௴ ௰௫௨ 1918-ம் ௵ ஜூலை௴ 30௳ | இதழ் 4

## கடவுள் வணக்கம்.

மண்ணாதி யைந்தொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி சுரோத்ராதியும்
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதியுடனே
தொண்ணூற்றொடாறு மற்றுள்ளனவு மௌனியாய்ச்
சொன்னவொரு சொற்கொண்டதே
தூவெளிய தாயகண்டானந்த சுகவாரி
தோற்றுமதை யென்சொல்லுவேன்
பண்ணாரு மிசையினொடு பாடிப்படித்தருட்
பான்மைநெறி நின்றுதவரூப்
பக்குவவிசேஷராய் நெக்கு நெக்குருகிப்
பணிந்தெழுந் திருகை கூப்பிக்
கண்ணாறு கரைபுரள நின்றவன் பரையெலாங்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபை யிலானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

அறம்பழுக்குந்தருவே யென் குருவே யென்ற
னாருயிருக்கொருதுணையே யரசே பூவை
நிறம்பழுக்க வழகொழுகும் வடிவக்குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கு மிலங்கை ராவணனைப் பண்டோர்
வாழியினாற் பணிகொண்ட மணியே வாய்மைத்
திறம்பழுக்குஞ் சீராம வள்ளலே நின்
றிருவருளேயன்றி மற்றோர் செயலிலேனே.

210787



# ஞானோதயம்.

## ஆத்ம விசாரணை.

69-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

தீவிர முமுட்சு யாவனெனின், தாபத்திரய துக்கங்களைச் சகிக்க முடியாதவனாய்த் துக்ககாரணமாகிய ஈடணாத்திரயங்களையும் சுட்டசட்டியைக் கைவிடுவதுபோல அதிவிரைவாய் விட்டுத்துறந்து வியாதியாற் றுன்புறுபவன் தகுதியான வைத்தியனைத் தேடியடைவதுபோலச் சற்குருவைத்தேடி யடைபவனாகும். இவன் இச்சென்மத்திற்றானே சீவன் முத்தனாவன்.

மத்திம முமுட்சு யாவனெனின், ஈடணாத்திரயாபிமானமே சர்வ துக்ககாரண மென்பதையும் பிரமாத்மைக்கிய ஞானமே இவைகளை நிவர்த்தித்து அதிதானந்தமய மோக்ஷத்தைத்தரக்கூடிய தென்பதையும் சாஸ்திரத்தாலும் சற்சங்க வசனத்தாலும் யூகத்தாலும் அறிந்தபின்னும், மனைவி, புத்திராதி குடும்பங்களை விட்டொழிய மாட்டாமல் சஞ்சலம் பொருந்திய பாசமானதுடன் கூடியிருப்பனாவன். இவன் மூன்று சென்மத்திற்சீவன் முத்தனாவனென்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

மந்தமுமுட்சுயாவனெனின், மோக்ஷமடைதற்குக் காலம் பின்னிருக்கின்றது. இப்போதேன் அவசரப்படவேண்டும், புசிக்கத்தக்க போகங்களனைத்தையும் புசித்துச் செய்யத்தக்க விவகாரங்களனைத்துஞ் செய்துமுடித்துவிட்டு அதற்குமேல் மோக்ஷ எத்தனஞ்செய்வோ மென்றெண்ணிக் கொண்டிருப்பனாவன். இவன் யுகாந்தத்தில் முத்தனாவன்.

அதிமந்த முமுட்சுயாவனெனின், வருவது சும்மாவிருக்கினும் வரும் வாராதது எந்த எத்தினம் பண்ணினும் வாராது, மார்க்கத்திற் செல்பவனுக்கு யாதொரு பிரயத்தனமுமின்றி யெதிரே மாணிக்கமிருந்து கிடைத்தாற்போல நமக்கு மோக்ஷம் கிடைக்குமானாற் கிடைக்குக, பிரயத்தினம் பண்ணவேண்டாமென்றும் மூடபுத்தியோடிருப்பவன், இவன் பல யுகங்கள் செல்லினும் முத்தியடையாதவனாய்ப் பல விதத்துக்கானுபவியாயிருப்பான்.

மோக்ஷமடைய விரும்புகிறவர்களுக்கு மேற்சொல்லிய நான்கு சாதனங்களும் குறைவுபடாமல் வேண்டும், இதற்கு பிரமாணம் கைவல்லியம்.



சாதன மின்றி யொன்றைச் சாதிப்பா ருலகிலில்லை
ஆதலா லிந்த நான்கு மடைந்தவர்க் கறிவுண்டாகும்
நூதன விவேகியுள் ளினுழையாது நுழையுமாகிற்
பூதசன் மங்கள் கோடி புனிதனும் புருடனாமே.

இந்த நான்கு சாதனத்துக்கும் அதிகாரியானோனாகியவன், மனமுதலியவாறு இந்திரியங்காளாலும், பூமியில் தனக்கிடுக்கணை நேரிடுந் தெய்வச்செயல்களாலும் பஞ்சபூதங்களாலும் அவற்றின் பௌதிகங்களாலும் நேரிடும் மூன்றுவித தாகமடைந்து வெய்யிலாற் சகிக்கப்படாத புழுவைப்போல வலைந்து ஞான தீர்த்தத்தில் மூழ்கிவிட அதி தீவிரமாய் சற்குருவை நாடிச்செல்லுவான்.

வேடுவர் வலையிலகப்பட்டு அவ்வலையைக் கிழித்துக்கொண்டு ஓடாநின்ற மானானது, பின்னும் வேடர் குடிசிலாகிய கிராமங்களையும், புலியாகிய மிருகங்கள் வசிக்கும் மலை குகை பெருங்காடாதிகளையும், பாலைவனங்களையும், நாடாமல், சீதளமாகவும் நிர்ப்பயமாகவுமுள்ள நல்லாரணியங்களை நாடிச்செல்வதுபோலச் சனன மரண சம்சார துக்கங்கட்குப் பயந்து ஸ்திரிதன புத்திராதிகளின் அபிமானங்களைத் துறந்து வெளிப்பட்ட முமுட்சுவானவன் பின்னும் ஸ்திரியாதிகளையும், தன் புத்திராதிகளையும் சன்மவதுவான சரியை கிரியையாதிகளைப் போதிப்பவரும், புகழ்நிமித்தம் வேதாந்த சாஸ்திரங்களை போதிப்பவருமாகிய அநாசாரியார்களையும் நாடாமல், பிரதிப்பிரயோசன விருப்பமின்றிக் கிருபா நிமித்தம் ஞானானுக்கிரகஞ் செய்பவராயும், கல்வி யறிவு அடக்கம் வைராகம் சீவகாருண்யமுள்ளவராயும், பிரஹ்ம ஞானியாயுமுள்ள சற்குருவை மனத்திலன்பும் வாக்கிற்றோத்திரமும் கரத்திலாராதனைக்குரிய பத்திர புட்பாதிகளுமாகிய இவைகளோடருகிற்சென்று அவர் திருவடியைத் தரிசித்துப்பத்திர புட்பங்களா லருச்சித்துச் சிரமேற்குவித்த அஞ்சலியஸ்தனாய் நமஸ்கரிக்கவேண்டும்.

நமஸ்கரித்தெழுந்து கிருபா சொரூபியாகிய சற்குருவே! ஓ சுவாமி! ஓ பகவானே! நானார்? இந்த நாநாவாகிய உலகம் யாது? இது யாருடையது? எனக்குச்சனன மரணம் வந்த வாறேது? இது எதனால் நீங்கும்? அடியேனுக்கநுக்கிரகஞ் செய்தருளவேண்டுமெனச் சமயம் நேர்ந்தபோது, நேர்ந்தபோது விண்ணப்பித்துத்தன் திரவிய சரீர வாக்கு மனங்களை பாதகாணிக்கையாக அர்ப்பணஞ்செய்து குருவை விட்டு நீங்காமலிருக்கவேண்டும். இதற்கு பிரமாணம்.

கைவல்லியம்,

நற்குருத்துடையோனாகி ஞானவானாகி நின்றோன்
மர்க்கட நியாயம்போல மகாபூத விகாரந்தொட்டு

நிர்க்குண விதேகமுத்தி நிலைபரியந்தஞ்சொன்ன
சற்குருவினை விடாமற்சந்தத மநுசரித்தான்.

மேற்சொல்லியவாறு குரு சந்நிதானத்தைவிட்டு நீங்காமலிருந்து குருமுகமாகச் செய்யப்பட்ட சாஸ்திர சிரவணத்தால் பிரஹ்மத்தைப் பரோக்ஷமாக அறிந்து பின்னர் அபரோக்ஷமாதற்கு விசாரஞ்செய்யாமல் சதாதானே பிரஹ்மமெனப்பாவித்து பஞ்ச யோகங்களில் யாதானும் ஒன்றன் அநுசந்தானத்தால் மனதை பிரஹ்மத்தில்லயப்படுத்தி அப்பிரஹ்மத்திலே இரண்டறக்கலப்பதாம். யோகத்தைப்பற்றித்தனியாய் மறுமுறை விரித்தெழுதுவோம்.

---

## ஜீவகாருண்யம்.

இவ்வுலகத்தில் பெறுதற்கரிய மானிடஜென்ம மெடுத்த நாம் இச்சென்மத்தாலடையத்தக்க ஆன்மலாபத்தை இச்சென்மமுள்ளபோதே யறிந்து அடையவேண்டும்.

அந்த ஆன்மலாபமாவது எல்லாவண்டங்களையும், எல்லாப்புவனங்களையும், எல்லாச்சீவர்களையும், எல்லாப்பொருள்களையும், எல்லா ஒழுக்கங்களையும், எல்லாப் பயன்களையும் தமது பூரண வியற்கை விளக்கமாகிய அருட்சத்தியால் தோன்றி விளங்க விளக்கஞ்செய்விக்கின்ற இயற்கையுண்மை வடிவினராகிய கடவுளின் பூரண வியற்கையின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்திலும் எவ்விதத்தும் எவ்வளவுந்தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வாம்.

இயற்கையின்பத்தைப்பெற்று தடைபடாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரிய வாழ்வை எதனாலடையக்கூடுமெனில், கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக்கொண்டே யடையவேண்டும். கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளை எதனாற் பெறக்கூடுமெனில் ஜீவகாருண்யத்தினால் பெறக்கூடுமேயன்றி வேறெந்த வழியிலும் பெறக்கூடாது.

அருளென்பது கடவுள் தயவு, கடவுளின் இயற்கை விளக்கம் ஜீவகாருண்யமென்பது ஜீவர்கள் தயவு, ஜீவர்களான்மாவியற்கை விளக்கம் இதனால் தயவைக்கொண்டு தயவையும் விளக்கத்தைக்கொண்டு விளக்கத்தையும் பெறக்கூடும்.

ஒரு மனிதனிடத்து ஜீவகாருண்யம் விளங்கும்போது அறிவும், அன்பும் உடனாகநின்று விளங்கும். அன்பினது மேலீட்டால் அன்பே வடிவமான கடவுளிடத்தில் இரண்டறக்கலந்து சாயுஜ்ய பதவியடைகிறான். அன்பே கடவுளின் வடிவம் என்பதற்கு பிரமாணம்;



அன்புஞ் சிவமுமிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவதியாரு மறிகிலார்
அன்பே சிவமாவதி யாருமறிந்தபின்
அன்பே சிவமாயமர்ந்திருந்தாரே.

என்னுந்திருவாக்காகும். ஆகவே ஜீவகாருண்ய மென்பதென்னவெனில், ஜீவர்களுக்கு சீவர்கள் கொலை, பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை பயம் இவைகளால் துக்கத்தையனுபவிக்க கண்டபோதாயினுங் கேட்டபோதாயினும் உண்டாகும் ஆன்ம உருக்கமேயாம். இவ்விதமாக ஜீவகாருண்யமுண்டாவதற்கு காரணமென்னவெனில். சீவர்களெல்லாமொரு தன்மையாகிய இயற்கையுண்மைச் சர்வசத்தியுடைய கடவுளால் சிருஷ்டிககப்பட்டபடியால் ஒருரிமையுள்ள சகோதரர்களேயாகும். சகோதரர்களுளொருவர் ஒரு ஆபத்தால் துக்கப்படுகின்றபோதும் துக்கப்படுவாரென்றறிந்தபோது மவரைத்தமது சகோதரரென்றுகண்ட மற்றொரு சகோதரருக்கு உருக்கமுண்டாவது சகோதரவுரிமையாதலால், ஒரு சீவன் துக்கத்தையனுபவிக்கக்கண்டபோதும் துக்கப்படுமென் றறிந்தபோதும் மற்றொரு சீவனுக்கு உருக்கமுண்டாவது பழைய வான்மாவுரிமையேயாகும். சிலர் சீவர்கள் துக்கப்படுகின்றதைக் கண்டபோதும் சீவகாருண்யமில்லாமல் கடின சித்தர்களாயிருக்கிறார்களே யெனில்:—துக்கப்படுகின்றவரைத் தமது சகோதரரென்றும் துக்கப்படுகின்றாரென்று மறியத்தக்க வான்ம அறிவு என்கின்ற கண்ணானது அஞ்ஞானகாசத்தால் மிகவும் ஒளிமழுங்கினபடியாலும், அவைகளுக்குபகாரமாகக்கொண்ட மன முதலான வுபநயனங்களாகிய கண்ணாடிகளும் பிரகாச பிரதிபலிதமில்லாமல் தடிப்புள்ளவைகளாயிருக்கிறபடியாலும் கண்டறியக்கூடாமையால் சகோதரவுரிமையிருந்தும் சீவகாருண்யமுண்டாகாமலிருக்கிறது.

இந்த ஜீவகாருண்யத்தால்த்தான் இகலோக வொழுக்கம் வழங்குகின்றது எங்ஙனமெனில், சீவகாருண்யமில்லாதபோது அறிவும் அன்பும் தோன்றாது அவை தோன்றாதபோது ஒருமையும் உபகாரமும் விளங்காது அவை விளங்காதபோது வலிய சீவர்களாலெளிய சீவர்கள் ஒழுக்கம் பொறுமை முதலானவைகள் தடைபட்டழிந்துபோம். பின்பு வலியவர்கள் ஒழுக்கங்களுந் தாமச ஒழுக்கங்களாகி ஒருவரொழுக்கத்தால் மற்றொருவர் ஒழுக்கம் மதத்தினாற் சோர்வடைந்து மாறுபட்டழிந்துபோம். சீவகாருண்ய ஒழுக்கஞ் சிறிதுமில்லாத சிங்கம் புலி முதலிய மிருகங்கள் வசிக்கின்ற கானகத்தில் இகலோக ஒழுக்கம் வழங்காததுபோல சீவகாருண்யமில்லாத மனிதர்கள் வசிக்குமிடத்தில் இகலோக ஒழுக்கமும் வழங்கமாட்டாது.

இந்த ஜீவகாருண்யத்தால்த்தான் பரலோக ஒழுக்கமும் வளங்குகின்றது எங்ஙனமெனில் :—சீவகாருண்யமில்லாதபோது அருள் விளக்கந் தோன்றாது அது தோன்றாதபோது கடவுள் நிலை கைகூடாது அது கூடாதபோது முத்தியின்ப மொருவருமடையமாட்டார்கள், அடையாத போது பரலோக ஒழுக்கமும் வழங்கமாட்டாது. சீவகாருண்ய ஒழுக்கம் மிகவும் வழங்காதபோது துன்மார்க்க பிறவியே பெருகி எங்கும் புல்லொழுக்கங்களே வழங்கும் எங்ஙனமெனில் :—சீவகாருண்யமில்லாத கடின சித்தர்களெல்லாம் அவரவர்கள் கடினசெய்கைக்கித் தக்கபடி பரலோகத்தில் நரகவேதனைகளனுபவித்தும் இவ்வுலகில் புலி, கரடி, சிங்கம், யானை, கடா, பன்றி, நாய், பூனை, முதலிய மிருகங்களாகவும் சிலர் பாம்பு தேள் முதலிய விஷஜெந்துக்களாகவும், சிலர் காக்கை, கழுகு, பட்சி சண்டாளங்களாகவும், சிலர் எட்டி, கள்ளி முதலிய அசுத்த தாபரங்களாகவும், சிலர் முதலை, சுறா முதலிய கடின ஜெந்துக்களாகவும் பிறந்திருக்கின்றார்கள், ஆதலால் புல்லொழுக்கங்களே மிகவும் வழங்கக்கூடியதாய்விடும்.

சீவர்களுக்கு கொலை, பசி, தாகம், பிணி, இச்சை, எளிமை, பயம் என்பவைகளால் வரும் அபாயங்களை தக்க சுதந்தரமுள்ள சீவர்கள் காருண்யத்தால் நிவர்த்தி செய்விக்கவேண்டுமென்றும், அப்படி நிவர்த்திசெய்து வைப்பதில் கொலையினால் வருந்துன்பமும் பசியினால் வருந்துன்பமும் தவிர மற்றவைகளால் வருந்துக்கங்களை மாற்றுவது அபர சீவகாருண்யமாதலாலிவ்வுலக யின்பத்தை மாத்திரஞ் சிறிதுண்டுபண்ணுமென்றும், கொலையினாலும் பசியினாலும் வருந்துன்பத்தை நிவர்த்திசெய்விப்பது பர சீவகாருண்யமாதலா லிவ்வுலக த்தின்பங்களையுமளவிறந்த சித்தியின்பங்களையும் எக்காலத்து மழியாத முத்தியின்பத்தையு மடையப்படுமென்றும், அன்னிய சீவர்களுக்கேற்படும் துன்பங்களை நிவர்த்திசெய்ய தங்களுக்குத் தக்க சுதந்தரமிருந்தும் நிவிர்த்திக்காதவர்களுக்கு இவ்வுலக இன்பத்தோடு மோக்ஷத்தையனுபவிக்கின்ற சுதந்திரமு மடையப்படுவதில்லை என்றும், தற்காலத்திலனுபவிக்கின்ற புவனபோக சுதந்தரங்களையுமிழந்து விடுவரென்றும் வேதங்கள் கூறியிருப்பதோடும் பெரியோர்களும் கூறியிருக்கிறார்கள் இதற்கு பிரமாணம் சிவதருமோத்திரம்.

உற்றிடுவ ருரைத்த துயரனைத்தினையு முயிர்க்கிரக்க
மற்றவதைத் தவைதம்மை யவலமெனு தவற்றானைத்
துற்றினரு மற்றுமுள கொலைபுரிந்த துரிசினரும்
பற்றுமிலர் படுந்துயர்க்குக் கடுந்தூதர் வலைப்பட்டே.

என்ற திருவாக்காகும். மேற்சொல்லிய கொலை, பசியினால் வருந் துன்பத்தை நீக்குவதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லக்ஷயமாயினும், நாம்



யிப்போது முக்கியமாய் எடுத்துக்கொண்டது கொலை மறுத்தலேயாம் ஆகவே நாய், நரி, காக்கை கழுகு இவைகளுக்கும் பக்ஷணமாக இன்றைக்கோ நாளைக்கோ விட்டுவிடப்போகிற இந்த தேகத்தை மற்ற ஜீவர்களை கொலைசெய்து அதன் ஊனைத் தின்று வளர்த்து முன்சொல்லியபடி இகத்திலும் பரத்திலும் துன்பத்தை யனுபவிக்கச் செய்துகொள்ளும் மனிதர்களின அறியாமையும் அந்தகாரமு மென்னவென்று சொல்வது. நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும்

நல்லாறெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார், அதாவது:—(மேற்கதியும் முத்தியும் பெறுவதற்கு) நல்லாறெனப்படுவது—நல்லவழியென்று சொல்லப்படுவது எதுவென்றால் யாதோருயிரையும் கொல்லாமையாகிய அறத்தினை நினைக்கும் வழியாம். இன்னும் கொலைசெய்து அதன் ஊனைத்தின்பதனால் வருந் துன்பத்தைப்பற்றி சிவஞான தீபம்.

எவ்வுயிரும் பரபரன் சந்நிதியதாகு மிலங்கு முயிருட
    லனைத்து மீசன்கோயி
லெவ்வுயிரு மெம்முயிர்போலென்று நோக்கி யிரங்காது
    கொன்றருந்து மிழிவினோரை
வெவ்வியம தூதருந் தண்டஞ்செய்து வல்லிரும்பை
    யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்திமாறா வேதனைசெய்
    திடுவரென வோது நூலே.

என்றும் நமது பெரியோர்கள் அருளிச்செய்திருக்கிறார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் நமது (நாடார்) ஜனசமூகத்தில் "பொங்கல்" என்றுவழங்கும் உற்சவகாலங்களில் ஹிந்துமதத்தின் தரும உபதேசங்களுக்கும் சகலராலும் அங்கீகரிக்கப்படும் சீவகாருண்ணியத்திற்கும் பொருந்தாததாயும் இகத்திலும் பரத்திலும் துக்கத்தைத் தரக்கூடியதாயுமிருக்கின்ற கொலையாகிய ஆடு கோழிகளைப்பலியிடுதலையும் பெரும்பாலோர் அவ்வூனைத் தின்று மாமிசபக்ஷணிகளாயிருந்துவருவதையும் சிந்திக்க மனம் திடுக்கிடுகின்றது.

அருமைச் சகோதரர்களே நமது சனசமூகம் அஞ்ஞானமென்னும் அந்தகாரத்தினின்றும் விழித்து முன்னேற்ற மடையாததற்கு இதோர் முக்கிய காரணமென்று இப்போதாவது சிந்திக்கின்றீர்களா?

மேலேசொல்லியபடி சீவகாருண்யமில்லாத விடத்து அறிவும் அன்

பும் உண்டாகிறதில்லை அறிவும் அன்பும் யேற்படாதவிடத்து கடவுள் அருள் உண்டாவதில்லை' கடவுள் அருள் நோக்கமில்லாத ஒரு சனசமூகத்தின் நிலமையைக்குறித்து இங்கு விஸ்தரிப்பதனாவசியமாகும் நீங்களே சிந்தித்துக்கொள்ளுங்கள்.

இனியாவது நமது சனசமூகம் கல்வி, ஞானத்தில் முன்னேற்றமடைந்து உன்னத பதவியை யடையவேண்டினால் நீங்கள் ஒவ்வொருவரும் புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை யடைந்து கடவுளுக்குப் பாத்திராராக வேண்டினால் பலியிடுதல் என்னும் கொடிய வழக்கத்தை வேரோடறுத்து மாமிசபட்சணத்தை விலக்கி வீரசைவர்களாகி கடவுளின் அருளைப் பெறுங்கள். அன்னவாருளால் இகத்தில் அஷ்ட ஐசுவரியங்களையும் பெற்று பாத்திலும் சிவசாயுச்யபதவி யடைவீர்கள். சர்வசீவதயாபரன் தானை செய்வாராக.

---

## பகவத்கீதை.

ஆசை: பயம், கோபம் இவைகளற்றும் மனதை என்னிடத்தில் வைத்து மென்னையே யுபாசித்தும் அநேகர் ஞானமாகிற தபசினாலே பரிசுத்தர்களாய் என்னுடைய சாயுச்சயத்தை யடைந்தார்கள்.

ஓ! அர்ச்சுனா! எவர்களெவ்விதமாகஎன்னை யுபாசிக்கின்றார்களோ அவர்களை யவ்விதமாகவே நான் அநுக்கிரகிக்கிறேன். மனிதர்கள், என்னுடைய மார்க்கத்தை சகலவிதத்தினாலேயும் அநுசரிக்கிறார்கள்.

ஆசையற்றும், மனசு இந்திரியங்களை யடக்கியும், சகலவித சம்பாத்தியத்தை விட்டும், சரீரம் நிலைத்திருப்பதற்குள்ள ஆகார நிமித்தமாய்ச் செய்யவேண்டிய கருமமெவ்வளவோ அவ்வளவு மட்டும் செய்கிறவன் பாபத்தை யடைகிறதில்லை.

• விரும்பாமல் கிடைத்த லாபத்தினால் திருப்தி யடைந்தவனையும் சீதோஷ்ண சுகதுக்காதிகளில் விருப்பு வெறுப்பற்றவனையும், மாச்சரியமற்றவனையும், கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சந்தோஷ விசனமில்லாமல் சமமாயிருக்கிறவன் கருமங்களை செய்தபோதிலும் கருமபந்தத்தை யடைகிறதில்லை.

அபிமானங்கள், காமக்குரோதங்கள், இவைகளை விட்டு ஞானநிஷ்டையிலேயே ஸ்திரமான மனதையுடையவனாய் ஈசுவாராராதனார்த்தமாகவே செய்கிறவனுடைய கருமமானது பலனுடன் கூடி நசித்துப்போகும்.



# இராமகிருஷ்ணபரமஹம்ஸதேவரின் திருவாய்மொழி.

### ப்ரஹ்மலக்ஷணம்.

வினா:—ப்ரஹமத்தின் லக்ஷணம் யாது?

விடை:—ப்ரஹ்மம், நிர்விசேஷமாயும், நிர்விகாரமாயும், நிச்சலமாயும், மேருகிரியைப்போலும் ஸ்திரமாயுமுள்ளது.

அவாது நாமதேயம் சின்மயம் அவாது யிருப்பிடமும் சின்மயமே. அவரோ அகண்ட சித்ஸ்வரூபியான பிரபு.

பகவான் ஒரு ஊசியின் காதினூடே ஒரு யானையைப் புகுத்துவார் அவர் சங்கர்ப்பித்ததையெல்லாம் செய்ய அவராலாகும்.

சூரியபிம்பம் பூமியைவிட எவ்வளவோ மடங்கு பெரிதாயிருப்பினும் வெகு தூரத்திலிருப்பதால் மிகச்சிறிய சக்கிரத்தைப்போற் காணப்படுகின்றது. அதுபோல் பகவானும், அநந்தராயும் பெரிதினும் பெரியவராயும் இருப்பினும் அவரைவிட்டு வெகுதூரம் விலகியிருக்கிற நாம் அவாது நிசமான பெருமையை அறிய அசக்தர்களாயிருக்கின்றோம்.

பகவான் அகண்ட நித்திய ப்ரஹ்ம ஸ்வரூபியாயும் ப்ரபஞ்சத்தின் பிதாவாயும் இருக்கின்றார். ஸச்சிதாநந்த ஸ்வரூமமாகிய அகண்ட பரப்பிரஹ்மமானது எல்லையும், வரம்புமில்லாத அகன்ற கறையற்ற கடலுக்கொப்பாக அத்தகைய பெருங்கடலில், நான் தட்டுமாறி ஆழ்கின்றேன். ஆனால் நித்திய லீலாவிநோதியாய் விஹரிக்கும் ஸகுணப் பிரஹ்மமாகிய ஸ்ரீ அரியை நான் அண்டும்பொழுது கடல்மூழ்கிப்போகுமொருவன் கரையைக் கண்டதுபோல் ஆறுதலடைந் தானந்திக்கிறேன்.

### ஸகுண நிர்குணப் பிரஹ்மம்.

இறுகிப்போன நீர் பனிக்கட்டியாவதுபோல் கடவுளின் ஸகுணஸ்வரூபமானது ஸர்வ வியாபியான நிராகாரப் பிரஹ்மத்தின் ஸங்குசித (குறுகிய) ரூபமாகும் அதாவது, கநீபூத (கட்டியான) ஸச்சிதாநந்தம் என்றும் சொல்லலாம். பனிக்கட்டியானது நீரினின்றும் வேறாகாது நீரிலேயே இருந்து பிறகு நீரிலேயே கரைந்துவிடுவதுபோல், ஸகுணப்பிரஹ்மமும் நிர்க்குண ஸ்வரூபத்தினின்று வேறாகாது நிற்பதாம். ஸகுணப்பிரஹ்மமாகிய பகவான் நிர்க்குணப் பிரம்மத்தினின்று ஆவிர்ப்பவித்து அதிலேயிருந்து கடைசியில் அதிலேயே லீனமாகி மறைகின்றார்.

கடவுள் ரூபியாயும், அரூபியாயும், ரூபா ரூபங்களைக் கடந்தவராயும் விளங்குகிறார். அவர் இன்னும் எத்தகையரென்பதைச் சொல்ல அவரால்தான் ஆகும்.

பக்திமார்க்கத்தால் பரமனைப்போற்றும் பக்தன் ஓர் அவசரத்தில் ரூப விசிஷ்டமான ஈஸ்வரனை அநுபவிப்பதிலும் மற்றோர் அவசரத்தில் ரூபாஹிதரான ஈசுவரனை அநுபவிப்பதிலும் ஆனந்தமடைகின்றான்.

நமது ஆப்த மித்திரனை நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்பதுபோல் ரூபத்துடன் விளங்கும் ஈசுவரனையுங் கண்ணாரக் கண்டு களிக்கலாம்.

* மீன் என்ற ஒரே வஸ்துவானது குழம்பு, கறி, வறுவல் எனப் பலவாறு பக்குவம் செய்யப் படினும் ஒவ்வொருவனும் தனக்கு இஷ்டமான பக்குவவகையையே விரும்புவதுபோல் ஜகதீசன் ஏகனே யாயினும் பக்தகோடிகளின் அபீஷ்டப்படி அநந்தவிதமான திருக்கோலத்துடன் விளங்குகின்றமையால் ஒவ்வொரு பக்தனுக்கு பகவான் எந்தக்கோலத்துடன் காட்சி யளித்தாரோ அதனையே சிறந்ததெனக் கொள்கின்றான். சிலருக்கு அவர் பட்சமுள்ள யஜமானனாயினும் அன்புள்ள தந்தையாயும் நகைமுகத்துடன் சீராட்டும் செல்வத் தாயாயும் மற்றுஞ் சிலருக்குக் காதல் நிறைந்த கணவனும் சொற்றவராதொழுகும் அரும்புதல்வனாயும் விளங்குகினறார்.

குறிப்பு:—வங்காளத்திலே பிராமணர்கூட மச்ச மாம்ச போஜிகளானமையின் இத்தகைய உதாரணங்களை ஸாதாரணமாகக் கூறியிருக்கின்றார்.

## மாயையும் பிரஹ்மமும்.

மாயைக்கும் பிரம்மத்துக்குமுள்ள சம்பந்தமென்னவென்றால், மாயையைச் சுறுசுறுப்பாயும், அசைவுடன்கூடியும் உள்ள சர்ப்பத்துக்கு ஒப்பிட்டால் ப்ரஹ்மம் அசைவற்று நிலையாய் நிற்கும் சர்ப்பத்துக்கு நிகரெனக் கூறலாம். ப்ரஹ்மமென்ற பெயரால் வழங்கலுறும் அகண்ட நிச்சதத்துவத்தின் சக்திவிசிஷ்டமான தோற்றத்துக்கே மாயை யென்று பெயர்.

பிரபஞ்சத் தோற்றமெனும் வலைக்குள் விழுந்த நித்யாநந்தஸ்வரூபமாகிய ப்ரஹ்மம் அழுவதுபோலவும்புலம்புவதுபோலவும் காணப்படுகின்றது சிஷ்யர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கையில் குருவானவர் இரண்டு விரல்களையுயர்த்தி, அதனால் ப்ரஹ்மம், மாயை என்றத்வைத என்ற பாவனையையும், பிறகு குரு விரலைத் தாழ்த்தி அதனால் மாயை மறையுங்கால் பிரபஞ்சத்தில் எஞ்சியிருப்பது அகண்டமானபரப் பிரஹ்மமே யென்பதையும் காட்டியருளினர்.

மாயாசக்தியும் அவாது லீலாவிலாசங்களும் இல்லாவிடில் ப்ரஹ்மம் சாக்ஷாத்காரம் அடைய யாரால் முடிந்திருக்கும்.

(தொடரும்.)

கு. ச. முத்துநாடன்,
அருப்புக்கோட்டை.

---



## க்ஷத்திரிய நாடார்கள் கைதொழிற்சாலை.

இக் கைத்தொழிற் சாலையானது விருதுபட்டி, கோட்டைப்பட்டித்தெரு ஸ்ரீமான் அ. ச. சொ. சுந்தரநாடாரவர்கள் 1ம்நிர். கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாய்த் தெரிந்து சந்தோஷிக்கிறோம். ஒரு சனசமூகமானது சிறப்புற்று முன்னேற்றமடைவதற்கு கல்வி எவ்வளவு அத்தியாவசியமாய் வேண்டப்படுகிறதோ அத்துணை கைத்தொழிலும் அத்தியாவசியமென்பது சகலரும் நன்குணர்ந்த விஷயமேயாம். இத்தகைய கைத்தொழிற்சாலைகள் நம்மவர்கள் வசிக்கிற ஒவ்வொரு முக்கியமான இடங்களிலும் ஸ்தாபனம் செய்வது நமது சனசமூகத்தின் முன்னேற்றத்துக்கு இன்றியமையாததென்பது நாம் சொல்லாமலே விளங்கும்.

ஆகவே, முதல் முதலாய் ஆரம்பித்திருக்கும் இத் தொழிற்சாலைக்கு எவ்விடத்தும் எத்தேயத்துமுள்ள நமது குலாபிமானிகள் ஒவ்வொருவரும் தங்களாலியன்றவரை தாராளமாய்ப் பொருளுதவிசெய்து ஆதரிக்கவேண்டியது நம்மவர்களின் ஒவ்வொருவர்களின் முக்கிய கடமையாகும். இச்சாலைக்கி தனிக்கட்டடமமைக்க சுமார் ரூ 10000—0—0 மும் சாமான்கள் வகையறாக்களுக்கு ரூ 5000 மும் சம்பளம் சிலவு வகையறாக்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ 4000 மும் ஆக மொத்தம் ரூ 19000—0—0 செல்லுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேற்கண்ட தொழிற்சாலையில் வேலைகள் முடிந்தநேரத்திலும் முக்கியமாய் இராக்காலங்களிலும் கல்வியும் கற்றுக்கொடுக்கப்படும்.

இக் கைத்தொழிற்சாலைக்கு இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிற டைரெக்டர்கள் ஆனரெரி டைரெக்டர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களைத் தவிர ஷை தொழிற்சாலை விஷயமாய் ரூ 500-க்கு குறையாமல் திரவிய சகாயஞ்செய்பவர்களை விசேஷித்தடைரெக்டர்களாகவும், தர்மகர்த்தர்களாகவும் சேர்த்துக்கொள்ளப்படும். மேலும் ஷை தொழிற்சாலை விஷயமாய் சாமான்களையாவது மற்றும் பொருள்களையாவது இனும் அளிப்பவர்களின் பெயரை அச்சாமான்களின்பேரிலும் கட்டடங்களில் ஞாபகசின்னமாகவும் எழுதி வைக்கப்படும்.

இத் தொழிற்சாலைக்கி உபாத்தியாயராக மதராஸ் கவர்ன்மெண்டிலும் கொழும்பில் நடந்த சிலோன் அக்கிரிகல்ச்சரல் சொசயிட்டி எக்ஸிபிஷனிலும் தச்சுவேலை, நெசவுதொழில் இவைகளுக்காக சர்ட்டிபிக்கெட்டுபெற்றவரும் பாளையங்கோட்டை ஜயிலில் நெசவுதொழில் மானேஜராகவும் கோவில்பட்டி மில்லில் நெசவுமானேஜராகவுமிருந்த மிஸ்டர் V. A. கோவில்பிள்ளை நாடார் அவர்களையே வைத்து நடத்துவதாகத் தீர்மானித்து ஆரம்பித்திருக்கிறது.

பணமுதலிய பொருளுதவிகளையும், சாமான்களையும் அனுப்புகிறவர்கள் தற்சமயம் ஆனரெரி டிரஸ்டியாயும், பொக்கிஷதாரியாயுமிருக்கிற கனம், அ. சு. சொ. சு. பழனியப்ப நாடாரவர்கள் பெயருக்காவது மதுரை வடக்குமாசிவீதி வக்கீல் கனம் S. ஞானவொளிவு நாடார் அவர்கள் B. A. B. L. ஆனரரி செக்ரெட்டெரி ஆவர்கள் பெயருக்காவது அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

---

## நாடார் மாகாஜன சங்கம்.

இச்சங்கமானது நமது ஜனசமூகத்தின் முன்னேற்றத்திற்குரிய பிரசார வேலைசெய்வதே நோக்கமாகக்கொண்டு ஸ்தாபித்த சங்கமா? அல்லது வருஷத்திற் கொருதடவை வருஷோற்சவம் கொண்டாடுவதினோக்கமாக ஸ்தாபிக்கப்பட்ட சங்கமா? சங்கநிர்வாகஸ்தர்கள் இந்நோக்கங்களில் எந்நோக்கத்தை யனுசரிக்கிறார்களென்று நோக்குமிடத்து முதலாவதாகச் சொல்லிய சங்கத்தின் உண்மைநோக்கத்தை புறக்கணித்து இரண்டாவதாகச்சொன்னநோக்கத்தையே யனுசரித்து நடத்துகிறார்களென்று தெற்றென விளங்குகின்றது.

இவ்வருஷம் கூடியசங்கத்தில் ஆலோசனை செய்யப்பட்டவிஷயங்களும் தீர்மானித்த விஷயங்களும் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர இதுவரை என்னவேலை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஏதாவது வேலை செய்யப்பட்டிருந்தால் அவ்விஷயங்களை பொதுஜனங்கள் தெரிந்து கொள்ளும்படியாய் கனம் செக்ரெட்டெரியவர்கள் பத்திரிகைகள் வாயிலாய் ஏன் தெரிவிக்கக்கூடாது?

தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

என்று தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தருளிய கருத்துத்தானென்ன? இம்மாதிரியான சங்க நூறு நூறுவருஷங்கூடினாலும் நமது ஜனசமூகத்துக்கு ஓரளவு நன்மையும் பயக்காது. வருஷத்திற்கொருதடவை கூடிவிட்டு மற்றை நாட்களில் பட்டத்தைமாத்திரம் வைத்துக்கொண்டு வீட்டில் தூங்கிக்கொண்டிருப்பதினால் யாதொருபயனும் விளையாது.

நாம் முற்காலத்தில் நமது தாய்நாடாகிய இத்தேசத்தில் எவ்வளவு உரிமையுடன் வாழ்ந்து வந்தோமென்பதைச் சிந்தித்துப்பார்க்கிறீர்களா? இப்போது நடந்துவரும் அதிகோரமான யுத்தமானது அவரவர்கள் உரிமையைப்பாதுகாக்கும் பொருட்டென்பதையும் அறிவீர்களா? இப்போது ஒவ்வொரு தேசத்தலைவர்களும் ஒவ்வொருஜனசமூகத்தின் தலைவர்களும்தங்கள்



தேசத்தினுடைய்வும் ஜனசமூகத்தினுடையவும் முன்னேற்றத்துக்காக தங்களைப்பரித்தியாகஞ்செய்து உழைத்துவருகிறார்களென்பதையும் கேட்டுக்கொண்டுவருகிறீர்களா? அப்படியானால் நமது சமூகத்தின் முன்னேற்றத்திற்கே பாடுபடுவதென்று கங்கணங்கட்டிக்கொண்டு தங்களைப்பரித்தியாகஞ் செய்து யார், யார் வெளிவந்திருக்கின்றீர்கள். தலைவர் களில்லாத ஜனசமூகம் தாழ்வடையுமென்பதற்கையமுமுளதோ.

இனியாவது "நாடார்மகாஜனசங்கம்" என்னும் வீரத்தாயினிடத்து பொதுஜன ஊழியத்திற்காகத் தங்களைப்பரித்தியாகஞ்செய்து கொண்ட வீரபுருஷர்கள் உற்பவித்து உழைத்துவர அருள்பாலிக்கும்படி யாய் சகல வல்லஇறைவனை நாமெல்லோரும் மன்றாடுவோமாக.

"எழுமின்! விழிமின்! கருதியகருமம்
கைகூடும் வரை உழைமின்! அறிமின்!"
Arise! Awake! Stop not till you reach the goal"

---

## பெண்கல்வி.

நிலவுலாவிய வுலகின்மீதிலே ஆதிகாலமுதற்கொண்டு அதிக வுன்னதபதவி பெற்றிருந்த நம்மிந்தியாவிலும் ஏனைய தேசங்களிலும் மானிட ஜென்மமெடுத்த ஆண் பெண் இரு பாலர்க்கும் இழுக்கினைப்போக்கி ஒழுக்கத்தைக்காக்கும் கல்வி இன்றியமையாததாயிருப்பினும் காலத்தின் மாறுதலாகப் பெண்கல்வியென்று பிரித்துக்கூற வேண்டியதாயும் நேர்ந்தது.

### பெண்களின் பெருமை.

உலகத்தில் ஆடவர்களுக்கு பிரியமான வஸ்துக்களிலெல்லாம் முதன்மையானது பெண்ணேயாம். முக்கனியுஞ் சர்க்கரையும் பாலுந்தேனும் கலந்தபாகும் பித்தமேலிட்ட ஒருவன் வாய்க்குக்கசக்கும் பெண்ணென்ற பெருங்கனியோ என்றும் தித்திப்பு மாறாத தீன் கனியென்றேசெப்புவாம். அன்பு பிறந்ததே பெண்களிருதயத்திலாம். அருமையாயீன்ற நஞ்சிறுமதலைகளை ஆவலோடெடுத்து அணைத்து முத்தமிடும்போதது, சிறுமலங்கழிந்துவிட்டால் அருவைப்பட்டு அதனன்னை தன்னுதவியை அங்கனந்தேடுகின்றோம். அக்கரையாய்ப்பத்துச் சுமந்துபெற்ற அன்னையோவென்றால் கொஞ்சமும் அருவையில்லாது ஆடையாலோ நீராலோ உடலைச் சுத்தம்செய்து அன்போடு கொஞ்சிக்குலாவு

கின்றனள். இதனால் அன்புக்குறைவிடம் பெண்களிருதயம் என நன்கு புலப்படுகின்றது. அர்த்தராத்திரி வேளையில் ஆடவருக்குத் திடீரென ஓர் வியாதி தோன்றிடில் அதற்குற்ற பக்குவஞ்செய்து ஆதரிக்கும் டாக்டர், பெண்கள்நாயகமாம் அன்றி ஆற்றொணாத்துன்பமடைந்து ஆதரிப்பாரன்றி ஏங்கும்போது அருகிருந்து தேறுதலளிக்கும் சிநேகிதன் பெண்கள்நாயகமாம் இதற்குப்பல நூலாதாரங்களுண்டு விரிக்கிற் பெருகுமெனவிடுத்தோம்.

ஒரு பெண் கன்னிகையாயிருந்து இளமைமுற்றி பக்குவத்திற்கு வந்து ஒரு நாயகனை மணந்தபின்னே அவளுக்கு மனைவி பெயரென்றுண்டாகின்றன. ஆடவனே அரும்பாடுபட்டுக்கட்டிய வீடானாலும் அவ்வீட்டுக்குடையவளும் வீட்டிலிருந்து அரசு செய்பவளும் பெண்கள் நாயகமாம். தவிர இல்லாளென்ற பெயருமுண்டு அது இல்லத்திற்குடையவளென்பது பற்றிவந்ததாம். இதனால் இல்லத்திற்குண்டாங் காரியங்களெல்லாம் செவ்வனே பார்த்துக்கொள்ளும்பொறுப்பு அதிகமாய் பெண்களுக்கே ஆதிமுதற்கொண்டேற்பட்டிருக்கிறதென்பது புலப்படும். இல்லத்திற்கு பெண்களே பிரதானமாயிருப்பதால் இல்லாளகத்திருக்க இல்லாததொன்றுமில்லை யென்றும் இல்லாளில்லாத இல்லம் புலி குடியிருந்த குகைக்கு உவமானமாய் ஔவையார் கூறியிருக்கின்றாள். இவ்வுண்மை அநுபவித்தவர்களுக்கே அதிகமாய்த்தெரியும்.

தாயோடரு சுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடுதான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்
உற்றாருடன்போம் உடற்பிறப்பாற்றோள்வலிபோம்
பொற்றாலியோடெவையும்போம்.

மேற்கூறிய செய்யுள் மூலமாய் நாமறிந்துகொள்ளவேண்டியதென்னவென்றால், தாய், தந்தை, தமையன், குமாரன், உறவினர் இவர்களுடைய துணையொருவன் இழந்தாலும் அதனாலொவ்வொரு சாதகங்களே குறையுமென்பதாகவும் மனைவியில்லாவிடில் சகலசாதகங்களுமே இல்லையென்றுங் கூறியிருப்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற வாக்கியத்திலும் முன்னிலையும் பெண்களையே கண்கண்டதெய்வமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இப்படி அழவு



கடந்தபெருமை பெண்களிடமே இருப்பதாலும் ஒரு குடும்பமோ, ஒருதேசமோ, ஒரு ஜாதிஜனசமூகமோ முன்னேற்றமடையுஞ்சக்தி பெண்களிடமேயிருந்து பிறக்கவேண்டுமென்பதாகவும் ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால் என்னும் சிருஷ்டி திதி சங்காரமென்ற முத்தொழிலுக்குறித்தானவர்களாயுமிருப்பதாலும் ஆதியில்சிவன் உமையவளுக்குத்தன்தேகத்திற்பாதியைக்கொடுத்தும் பிரம்மா சரஸ்வதியென்பவளை சதாநாவில் வைத்தும் மகாவிஷ்ணும் லட்சுமியை மார்பில் வைத்தும் முருகன் வள்ளிதெய்வானையை யிருபாருஷத்தில் வைத்தும் நமக்கு வழிகாட்டியாயிருக்கிறார்கள். இதனால் பெண்களின் பெருமை எவ்வளவோ உயர்ந்ததென்பது விளங்குகின்றதன்றோ. இவ்வளவு உரிமைபெற்றிருக்கும் அருமையான பெண்கள் இருபாலார்க்கும் பொதுவாயுள்ள கல்வியைக் கல்லாதிருப்பார்களேயானால் ஆடவர்கள் வாழ்நாள் வீணாகவேமுடியும். ஆகையால் பெண்கள் படிக்கவேண்டிய காரியத்தில் ஆடவர்களே முயற்சியெடுக்கவேண்டும். அன்றி ஆடுமாடுகளுக்குச் சமானமாக வீட்டின் வேலைகளைத்தோட்டிபோற் பார்த்துக்கொண்டிருந்தால் போதுமென்றிருந்தால் அது ஆடவர்கள் முன்னேற்றத்திற் கனர்த்தமாகவே முடியும். ஆடவர்கள் அறிவுடையவர்களாயிருக்கவேண்டுமானால் அவர்களைப் பெற்றெடுக்கும் அருங்களிமாதர்களும் கற்றறிவுடையவர்களாயிருக்க முயற்சி ஆடவர்களேசெய்யவேண்டும். அன்றி வெள்ளரிவித்தில் பூசணிக்காய் பெறவேண்டுமென்று நினைப்பது மடமையேயாம்.

## முற்கால ஸ்திரீகள் முற்றும் படித்தவர்கள்.

நம்மிந்தியாவிலுள்ள முற்கால ஸ்திரீகள் முற்றிலுங்கற்றவர்களாயிருந்து வந்திருப்பதினாற்றான் சகல தேசங்களைப்பார்க்கிலும் நம்மிந்தியா சகல சாஸ்திரத்தையுந் தன்னுள்ளடக்கி வைத்திருக்கிறது. தத்துவ விசாரணைசெய்து கீர்த்திபெற்ற முப்பத்திமுக்கோடி தேவர்கள் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் வசித்தயிடமென்று பேர்பெற்றுமிருக்கின்றது. அநீதியைவென்று நீதியை நிலைநாட்ட பெண்களே ஆடவர்களுக்கு அருமையாய்த் துணைநின்று வந்தார்களென்பதற்குத்தக்க ஆதாரங்கள் மேலான

நூல்களில் நிறைந்து கிடக்கின்றது. நாளாகினி, துரோபதை, அருந்ததி முதலான பதிவிரதைகளின் சரிதையை அறியாதாருண்டோ. என்ன கஷ்டம் நேர்ந்தாலும் கணவனைப் பின்பற்றி நடப்பதே உத்தம ஸ்திரிகள் லக்ஷணமென்று இராமனோடு வனஞ்சென்று அனேக கஷ்டங்களை யனுபவித்த சீதாதேவியென்ன, தமயந்தி யென்ன, சந்திரமதியென்ன, கணவனுயிரைக் கொண்டு போன நமனோடு வாதாடிமீண்டும் கணவனைப்பெற்ற பராக்கிரமசாலியாகிய சாவித்திரியென்ன, போர் முகத்தில் தேர்த்தொழில்செய்த கைகேசியென்ன இம்மாதுசிரோன்மணிகளெல்லாம் முற்றிலுங்கற்றறிந்த பேரறிவாளிகளேயாம்.

அரிச்சந்திரன் தன்னுடைமிழந்து காசிநகரம் போய் நீசனுக்கு அடிமையாகி கடவுள் சோதனையால் தன் மனைவி சந்திரமதியை தன் கையாலேயே வெட்டும்படி நேர்ந்த சமயம் தத்துவமறிந்த சந்திரமதி யென்ன நினைத்தாள். நமது நாயகன் நம்மீதுள்ள ஆசையால் சத்தியத்தை மறந்து நம்மை யெங்ஙனம் வெட்டாது விடுவாரோவெனப் பயந்து நாயகனைப்பார்த்துக் கூறுகின்றாள். என்நாதா! பொய்யாகிய இப்பூதவுடம்பின் மேலுள்ள அபிமானத்தை உத்தேசித்து மெய்யாகிய உமக்குரிய சத்தியத்தைத்தவர விட்டிடாதீர். இதோ அடியாள் குனிகின்றேன் ஒன்றையும் யோசிக்காது வெட்டுமென்றனள்.

நளன் சூதாடி புட்கரனுக்கு நாட்டையொப்புவித்து தன் மனைவியுந்தானும் இரு குழந்தைகளும் வனஞ் செல்லும்போது ஒருநாளும் நடந்தறியாத இரு குழந்தைகளும் தாய் தந்தையர் முகத்தைப்பார்த்து நாம் வெகுதூரம் நடந்துவந்துவிட்டோமா வென்று இரங்கிக்கேட்கவே, நளன் தன் மனைவியைப்பார்த்து இரு குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு சேமமாயிருக்கும் உன் தாய்வீடுபோய்ச் சுகமாய்வாழ் எனச்சொல்லவும் திருவுருவம் பெற்ற தமயந்தி கூறுகின்றாள்.

**குற்றமில்க்காட்சி குதலைவாய் மைந்தரையும்**
**பெற்றுக்கொளலாம் பெறலாமோ—கொற்றவனே**
**கோக்காதலனைக் குலமகளுக்கென்றுரைத்தாள்**
**நோக்காள் மழைபொழியா நொந்து.**



அதாவது பிள்ளைகளைப்பெற்றுக் கொள்ளலாம் புருஷனைப் பெற முடியாதாகையால் அவ்வாறு சம்மதிக்க மனமின்றி இரு குழந்தைகளையும் தாய்வீட்டுக் கனுப்பிவிட்டு காட்டிற்சென்று கணவனைப்பிரிந்து கஷ்டப்பட்டு மறுபடியுந் தன்னாயகனை தன் அரியமுயற்சியினாலே கண்டடைந்த திறத்தை யென்சொல்வது இம்மாது சிரோன்மணிகளெல்லாம் படியாதவர்களெனக்கொள்ளலாமா.

## தூங்கிய காலம்.

நம்மிந்தியாவிலுள்ள அரசர்கள் ஒற்றுமையும் பலமுங்குன்றியபோது அன்னியநாட்டார்கள் பலதடவையும் படையெடுத்து நமக்குரிய சாதகங்களையெல்லாம் கொள்ளையடித்துச் சூறையாடியபோது கல்விக்குரிய சாதகமனைத்தும் அற்றுப்போய்விட்டது. ஆடவர்களுடைய கல்விகளே திண்டாட்டமாய் நேர்ந்தபோது பெண்கல்வியைப்பற்றிப் பேசவும் வேண்டுமா.

## நல்ல காலம்.

தெய்வபூர்வமாக பிரிட்டிஷ் ராஜ்யம் இப்பொழுது எங்கும் பரவியவுடன் இந்தியாவுங் கண்விழித்தது இதுகாறும் பெண்கல்வியைப்பற்றிப் பேசாது மௌனஞ்சாதித்த இந்தியர்களெல்லாம் பெண் கல்வியைப் பிரபலப்படுத்த முயற்சிசெய்ய பிரிட்டிஷ் ஆட்சியின்கீழே பலமாக்கப்பட்டது படியாத பெண்களை மணம்புரிந்தால் ஒருகை முடவன் போலும் ஒருகண் குருடன்போலும் என்று ஒவ்வொரு இந்தியனுங் கருதினன். சிலர் பெண்கள் படித்தால் கெட்டுப்போவார்களென்ற பேதைமதியுடையவர்களும் உண்டு. ஒருவன் சர்க்கரையை வாயிற்போட்டுக்கொண்டு கைக்கிறதென்று சொல்வானேயானால் அது அவன் வாயின் குணமேயன்றி சர்க்கரையின் குணமல்ல படித்தவளில் கெட்டவளுமுண்டு படித்தவளில் நல்லவளுமுண்டு அது இயற்கையாலுஞ் செயற்கையாலுமேற்படுவதேயாம் இதனால் கல்வியைத் தோஷஞ்சொல்வது ஞாயவிரோதம்.

பெண்கள் கெடுவதற்கு காரணம் ஆடவர்களே பெண்கள் கெடாமல் நல்லவர்களாயிருக்க வேண்டுமானால் ஆடவர்கள்தான்

நல்லவர்களாகவேண்டும். ஒரு பாதையில் நடப்பவன் அகஸ்மாத்தாய் தவறி விழுந்துவிட்டானேயானால் மறுபடியும் எழுந்து நடப்பதோடு இனிவிழாமலும் நடக்க எப்படிநடக்க முயல்வானோ அதுபோல் மனிதன் ஜீவியகாலத்தில் அவனுடைய முன்னேற்றம் தடைபட தெய்வாதீனமாய் அநேக தவறுதல்கள் ஏற்படவேகூடும் அப்படி யேற்படும் நேரம் ஒவ்வொருவரும் நம்முடைய செய்கையால் தவருதல் ஏற்பட்டுவிட்டது. அதனால் நமது வாழ்நாள் குறுகிப்போனதென்ற அறிவுவந்தபின்னாவது மனிதன் சரியாய் நடந்துகொள்ள முயற்சிசெய்வானேயானால் பெண்களின் நிலைமை தானே உயர்ந்துவிடவேதுவாகும். அன்றி பெண்கள் படித்தால் கெட்டுப்போவார்களென்று சொல்லிக்கொண்டே நாம் செக்கென்றும் சிவலிங்கமென்றும் பேதங்காணமுடியாமல் தீயகாமுகராயிருக்கும்வரையும் பெண்களின் நிலைமை உயராது. உயராத பாவம் நம்மைத்துயராமற் போகாது. ஆகையால் பெண்களின்பேரிலுள்ள இயற்கைப்பிரியத்தை தீயவழியிற் செலுத்தாமல் நல்லவழியிற் செலுத்தவேண்டும்.

நாடார்குல நண்பர்களே! நாமெல்லோரும் துக்கம் வேண்டாம் சுகம் வேண்டும் தாழ்மை வேண்டாம் மேன்மையே வேண்டுமென விரும்புவோமானால் சுகத்திற்கும் துக்கத்திற்கும் மேன்மைக்கும் தாழ்மைக்கும் காரணமாய் விளங்கும் நமது பெண்கள் இப்போதிருக்கிற நிலைமையைப்பார்க்கிலும் மேலான நிலைமைக்கு வரும்படி பெண்களுக்கு கட்டாயம் கல்வி புகட்டவேண்டும் ஒவ்வோரிடங்களிலும் பெண் பாடசாலைகளமைக்க வேண்டும் கிறிஸ்தவ கலாசாலைக்கனுப்புவதால்நமது மதக்கோட்பாட்டுக்கு மாறான சம்பவங்கள் நேரிடக்கூடும் போதனைமுறையோ நமது வீட்டு வேலைகளை திறமையோடு செவ்வனே தெரிந்துசெய்யப் போதுமான நமது நாட்டுக் கல்வியே கட்டாயமாய் போதிக்கவேண்டும். இதனால் அந்நியபாஷை வேண்டாமென்றில்லை கூடுமானால் இந்தியபாஷையும் இங்கிலீஷ் பாஷையும் கற்பிக்கலாம். எத்தகைய கல்வி போதிக்கினும் நமது இந்துமதத்தை அடிப்படையாய் வைத்தே போதிக்கவும் வேண்டும்.



## முடிவுரை.

இதுகாறும் கூறியவற்றால் கல்வி ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவானதென்பதும் காலத்தால் மாறுதலடைந்ததென்பதும் பெண்களே பெருமைக்கும் உரிமைக்கும் அன்புக்கும் உரித்தானவர்களென்பதும் முற்கால ஸ்திரிகளெல்லாம் கற்றவர்களென்பதும் பிற்கால தேசம் சீர்கேட்டால் கல்வி மோசம்போனதென்பதும் பிரிட்டிஷ் அரசின் பலமானபடியால் பெண்கல்வி தலைதூக்க ஏதுவானதென்பதும் பெண்கள் படித்தால் கெடார்களென்பதும் கெடுவது ஆடவர்களாலென்பதும் ஆடவர்கள் நல்லவர்களானால் பெண்கள் நிலைமை தானே உயருமென்பதும் மேலும் மதசம்பந்தமான கல்வியைக் கட்டாயம் புகட்டவேண்டுமென்பதும் நன்கு விளங்குகின்றன.

கு. ச. முத்துநாடன், அருப்புக்கோட்டை.

---

## சுகாதாரம்.

(74-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

2. தண்ணீரைக் கொதிக்கவைப்பதனால் சிலவித அசுத்தங்கள் கீழ்த்தட்டுவதுடன் கிருமிகளெல்லாம் கொல்லப்படுகின்றன. கொதிக்கவைத்த ஜலத்தோடு எக்காரணத்தைக்கொண்டும் குளிர்ந்த ஜலத்தைக் கலக்கக்கூடாது. ஏனெனில் குளிர்ந்த ஜலத்தில் கிருமிகளிருப்பதால் அது கொதிக்கவைத்த ஜலத்தில் வியாபிக்கக்கூடும். சில சமயங்களில் கொதிக்கவைத்த தண்ணீர் குளிரும் வரைக்கும் காத்திருப்பது நமக்கு மிகவும் கஷ்டமாயிருக்கும். அதற்காக சுடுகிற ஜலமிருக்கும் பாத்திரத்தை குளிர்ந்த ஜலமிருக்கும் இன்னொரு பெரிய பாத்திரத்தில் வைத்துக்குளிரவைக்கலாம்.

3. தண்ணீரானது சில மருந்துகளைச் சேர்ப்பதனாலும் சுத்தப்படுகிறது. (a) ஒரு காலன் (Gallon) தண்ணீருக்கு ஆறு க்ரெயின் (Grain) சீனக்காரம் சேர்த்தால் அநேகவித அசுத்தங்களும் கிருமிகளும் கீழே தங்கிவிடுகின்றன. மேலிருக்கும் தெளிவான ஜலத்தை வேறு பாத்திரத்தில் உடனே எடுத்துக்கொண்டு உபயோகிக்கலாம். மேற்சொல்லியதை விட அதிகமாக சீனக்காரம் உபயோகித்தால் தண்ணீர் குடிக்கத்தகுந்ததற்றதாய் போய்விடுகிறது. (b) தேத்தாங்கொட்டை யென்று சொல்லப்படும் ஒருவித கொட்டையை மண் முதலிய அசுத்தங்கள் கலந்த ஜலம் வைத்திருக்கும் பாத்திரத்தின் உட்புறத்தில் உரைத்தால் தண்ணீர் தெளிவாய்ப் போய்

விடும். இலைக்கள்ளி இலையின் சாற்றைச் சேர்த்தாலும் தண்ணீர் சுத்தமாகும். ஆனால் இவ்விரு வழிகளிலும் சுத்தப்படுத்தப்பட்ட ஜலம் சற்று நல்ல ருசியற்றனவாயிருக்கும். (c) பொட்டாஷியம் பெர்மான்கனேட் (Potasium Permanganate) என்னும் மருந்தை தண்ணீரில் கலப்பதனால் காலராமுதலிய வியாதிகளை உண்டாக்கும் கிருமிகளெல்லாம் மாண்டுபோகின்றன. இந்த மருந்தை ஒரு பாத்திரத்திலுள்ள ஜலத்தில் கரைத்து அந்த ஜலத்தைக் கிணற்றில் அல்லது குளத்தில் கலந்துவிடவேண்டியது. அப்படிச் செய்தால் கிணற்றிலுள்ள ஜலமானது சற்று சிவப்பு நிறமடைந்திருக்கும். ஆனால் அந்நிறம் வரவர மாறுதலடைகின்றது. 12 மணி நேரம் வரைக்கும் நிறம் மாறாமலிருக்கக்கூடிய அளவு மருந்தைச் சேர்க்க வேண்டும். காலராகாலத்தில் முனிஸிபாலிட்டியார் இவ்விதமாய்த் தண்ணீரைச் சுத்தப்படுத்தும்போது, அநேகர் சுத்திசெய்யப்பட்ட ஜலத்தை உபயோகிக்காமல் வேறு ஜலத்தை உபயோகிக்கிறார்கள். இது முற்றிலும் பிசகு. முனிஸிபாலிடியார் நமக்கு வியாதி வராதபடி ஜலத்தைச் சுத்திசெய்தனுப்புகிறார்கள். அப்படியிருக்க நாம் வியாதி வந்தாலும் வரட்டும் என்று கிருமிகள்உள்ள ஜலத்தையே உபயோகிப்பது மூடத்தனமேயாகும். (d) கிருமிகளைக் கொல்லுவதற்கு சோடியம் ஹைப்போக்ளோரைட் (Sodium hypochlorite) என்னும் மருந்தையும் உபயோகப்படுத்தலாம். பத்துலட்சம் பங்கு ஜலத்திற்கு ஒரு பங்கு மருந்தை உபயோகப்படுத்தினால் ஒரு மணி நேரத்திற்குள் ஏறக்குறைய எல்லாக் கிருமிகளும் நாசமடைகின்றன. (e) துத்தமும் சில சமயங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது.

4. அநேக விடங்களில் ஜலமானது வடிகட்டுவதனால் சுத்தப்படுத்தப்படுகிறது. பட்டணங்களிலுள்ள ஜனங்களுக்குத் தண்ணீரை வடிகட்டி பின்பு குளாய்களின் வழியாய் அனுப்பவேண்டுமானால், இரண்டு மூன்றடி உயரம் கற்கள் போட்டு அதனமேல் மூன்றடி உயரம் சுத்தமான மணல் போட்டு எல்லாவற்றிற்கும் மேல் ஒரு அடி ஜலத்தை நிரப்பி அதைக் கீழே போகும்படி செய்யவேண்டும். மணிக்கு நாலு அங்குலத்திற்கு மேல் வடிகட்டப்படும்படி செய்யக்கூடாது. ஏனென்றால் ஒருமணிக்கு அதற்குமேல் அதிகமாக ஜலம் வடிகட்டப்பட்டால் அநேக அசுத்தங்கள் மணலில், தங்காமல் வந்துவிடும். வடிகட்டும் வேலைசெய்ய ஆரம்பித்து இரண்டு மூன்று நாட்களில் மணலின்மேல் வழுவழுப்பான ஒரு வஸ்து படிகின்றது. இந்த வஸ்துவானது கிருமிகளை நூற்றில் 95 முதல் 96 வரைக்கும் போகவிடாமல் தடுத்துவிடுகின்றது. இந்த வஸ்துவைக் கெடுத்துவிடக்கூடாது. ஆனால் இது ஜாஸ்தியாய்ப் படிந்துவிட்டால் மேல் பாகத்தை மாத்திரம் எடுத்துவிடவேண்டியதுவரும். மேற்சொல்லிய வித



மாய்த் தண்ணீர் வடிகட்டுவதற்கு விஸ்தாரணமான இடம் வேண்டும். வீட்டில் தண்ணீரை வடிகட்டுவதற்கு அடுப்புக்கரியும் மணலும் உபயோகப்படுத்தப்படுகிறது. ரெயில்வேஸ்டேஷன்களில் உள்ளபடி மூன்று பானைகளைக்கொண்டு வடிகட்டும் கருவியொன்று செய்துகொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலிருக்கும் பானையில் சுத்தஞ்செய்யப்பட்ட அடுப்புக்கரியைப்போட்டு நிறைய தண்ணீரும் விட்டு, பானையின் அடிப்பாகத்தில் சிறு துவாரமொன்று போட்டு அத்துவாரத்தை வைக்கோலினால், தண்ணீர் துளிதுளியாய் விழும்படியாக அடைத்து, அப்படி வரும் தண்ணீரானது சுத்தமான மணல் போட்டிருக்கும் இரண்டாவது பானைக்குள் விழுந்து அதற்கடியில் முற்கூறியபடி வைக்கோலினால் அடைக்கப்பட்ட ஓர் துவாரத்தின் வழியாய் கீழிருக்கும் பானையில் விழுவதனால் தண்ணீர் சுத்தஞ்செய்யப்படுகிறது. ஆனால் மேற்கூறியபடி வடிகட்டும்பொழுது நுண்ணிய கிருமிகளும் ஜலத்துடனேயே மணலின்மேல் தங்காமல் வந்துவிடுகின்றது. ஆதலால் முதலில் கிருமிகளெல்லாம் சாகும்பொருட்டு தண்ணீரைக் கொதிக்கவைத்து பின்பு வடிகட்டவேண்டும். வடிகட்டுவதற்கு உபயோகப்படுத்தப்படும் கரி, மணல் முதலானவைகளை வாரத்திற்கு இருமுறை நீக்கிவிட்டு புதுக்கரி மணல் முதலியவைகளைச் சுத்தஞ்செய்து உபயோகிக்கவேண்டும்.

**S. Ramaswamy.**

---

## தற்கால இராஜீய நிலைமையும் நாடார்களும்.

சென்ற ஜூலை 8உ யன்று கவர்ன்மெண்டாரால் வெளியிடப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்ட் அரசியல் திருத்தங்களைப்பற்றி வர்த்தமானப் பத்திரிகைகளும் இந்தியப்பிரமுகர்களும் தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவித்துவருவதினின்று இந்திய இராஜீய நிலைமை எவ்வளவு கவலைக்கிடமாயிருக்கிறதென்பது தெளிவாகிறது. சுருங்கச் சொல்லின் சகல தேசங்களும் தத்தம் அரசியல் முறைகளை தாமே நிர்ணயித்துக்கொள்ளவேண்டுமென்றும் உலகத்தில் ஒருதேசத்தாரை மற்றொருவர் அடக்கி ஆளுதல் அறவே ஒழியவேண்டுமென்றும் அதற்காகவே இம் மகா யுத்தம் நடக்கிறதென்றும் சொல்லப்பட்டுவரும் இக் காலத்தில், இந்தியாவுக்கு மட்டும் மேற்கண்ட இரண்டு உரிமைகளும் கிடைக்கமாட்டாதென்று மேற்கண்ட திருத்தங்கள் நமக்குச் சொல்லுகின்றன.

இப்பொழுது நாடார்களான நமது நிலைமை யென்ன? நமது மாகாண நிர்வாகத்தில் நமக்குரித்தாகிய செல்வாக்கும் சனசமூகத்துள் விரிவான ஓட்சுதந்திரமும் கிடைத்தால்தான், சமூகவாழ்வில் நமக்குரிய சுதந்திரங்களை அடைந்து அனுபவிக்கச் சாத்தியப்படும். எப்படியெனில், சனசுதந்திரம்

விரிவாக்கப்படும்பொழுது தாலூகா போர்டு, ஜில்லாபோர்டு இவைகளுக்கு ஸ்தல நிர்வாகவிஷயங்களில் பூரா சுதந்திரமும் கிடைக்கும். நம்மவர்கள் நெருக்கமாய் குடியிருந்துவரும் ஸ்தலங்களிலேயே நமக்கு பல சுதந்திரங்கள் மறுக்கப்பட் டிருந்து வருவது அப்பொழுது சாத்தியப்படாது. நம்மவர்கள் விடாமுயற்சியால் ஸ்தல சுயஆட்சி சபைகளில் நமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ள முடியும். இவற்றின் மூலமாயும், ஜாதிப்பிரதிநிதித்துவ முறையிலும் மாகாண சட்டசபையில் நமது பிரதிநிதிகள் ஏற்பட்டு நமது உரிமைகளைக் காப்பாற்ற முடியும். இதர குலத்தவர்கள் நமது பிரதிநிதிகளின் கூட்டுறவை அபேக்ஷிக்க நேரிடு மாகையால் நமது நோக்கங்கள் இலகுவில் நிறைவேறும்.

இவ் வுண்மைகளை அறிந்தே நமது மகாஜன சங்கத்தின் சார்பாக மதுரையில் வைத்து H. E. கவர்னரவர்களிடம் ஓர் அட்ரஸ் வாசித்து கொடுக்கப்பட்டது. இந்தியா மந்திரி அவர்களுக்கும் இராஜப் பிரதிநிதிக்கும் ஓர் அட்ரஸ் அனுப்பப்பட்டதேயாயினும் நம்மவர்களின் முயற்சிக் குறைவாலேயே நமக்கு பேட்டி கிடைக்காமல் போய்விட்டது. மேற்கண்ட இரண்டு அட்ரஸ்களிலும் நமக்கு மாகாண சபையில் தகுந்த பிரதிநிதித்துவம் வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. மேற்சொன்ன நமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் நாம் ஒருவாறு திருப்தி படையக்கூடும்.

நம் குலத்தவர்களுக்கு இப்பொழுது முன்னேற்றத்துக்கு அவசிமான திருத்தங்க ளென்னவென்றால்.

1. சட்டசபையில் சாதிப் பிரதிநிதித்துவ முறைப்படி பிரதிநிதிகள் அமரவேண்டும். நமது ஜனத்தொகைக்கு வியாபாரத்துக்கும் தகுந்தாற்போல் நமக்கு பிரதிநிதிகள் ஏற்படவேண்டும். 2. மாகாண நிர்வாகமானது ஜனப்பிரதிநிதி சபைக்கு உட்பட்டிருக்கவேண்டும். மேற்கண்ட இரு அம்சங்களும் கிடைத்துவிட்டால் முன் சொல்லியபடி நமது சுதந்திரங்களை நாம் நிலைநாட்டிக்கொள்ள முடியும். நமது வியாபாரமும் அதிக விருத்தியடைய இடமேற்படும். சமீபத்தில் வெளியிடப்பட்ட திருத்தங்களில் மேற்சொன்ன இரண்டு அம்சங்களும் இல்லை. ஆகவே நமது நிலைமை அணுவளவேனும் விருத்தி யடையாவில்லை.

ஆகவே, மேற்சொன்ன திருத்தங்கள் எங்களுக்குத் திருப்தியைத் தரவில்லை யென்றும், சரியான சுதந்திரமுறையில் எங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்படவேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரை இடைவிடாமல் வற்புறுத்தி வரவேண்டும். மகாஜன சங்கத்தவர்களும் எப்பொழுதும்போல் சும்மாயிராமல், ஊர் ஊராய்த் சென்று நமது கோரிக்கைகளை வற்புறுத்தி தீவிரமாய் வேலைசெய்து வரவேண்டும். S. நடராஜன்.



## தூத்துக்குடி காரப்பேட்டை

இப்பேட்டையை சீர்திருத்தும் விஷயமாய் சென்ற ஆனிமாசம் 16வ யில் கனம் அ.மா.வீரப்பநாடார் அவர்கள் தலைமையின் கீழ் சபைகூடியது. சகலபிரமுகர்களும் ஆஜராயிருந்தார்கள். பேட்டையின் சீர்கேட்டைப்பற்றி அதி உருக்கமாகவும் சிரத்தையோடும் பேசப்பட்டு அடியில்கண்ட தீர்மானங்களும், நியமனங்களும் செய்யப்படலாயிற்று.

(1) சொஸைடிட்டி ஆக்டுப்படி பேட்டை சீர்திருத்த விஷயமாய் தயார் செய்யப்பட்டிருந்த ரெகுலேஷனை தற்சமயத்திற் கேற்றவாறு திருத்தஞ் செய்து ரிஜிஸ்டர்செய்து கொள்ளவேண்டும்.

(2) ஷை ரெகுலேஷனை தற்சமயத்திற்கேற்றவாறு திருத்தஞ்செய்து தயார்செய்வதற்காக நாலுபெயர்களடங்கிய ஒருகமிட்டி நியமனஞ்செய்யப்பட்டது.

(3) கனம் அ. ரி. அ. சு. அவர்களிடமிருக்கிற பணத்திற்கு வட்டி நிபந்தனைகள் யேற்பாடு செய்யப்பட்டும் வசூலித்துக்கொள்ளவும் தீர்மானஞ் செய்யப்பட்டது.

(4) தற்சமயம் பேட்டையின் கட்டிடங்களின் வாடகைத்தாரணை கூடுதலாயிருக்கிறதென்று தெரிவதால் அதைக்குறைத்து வசூல்செய்யவேண்டுமென்பதாயும் தீர்மானித்து, அக்கட்டிடங்களின் வாடகைத்தாரணையை நிர்ணயஞ்செய்வதற்காக 4 பெயர்களடங்கிய ஓர் கமிட்டியும் நியமனஞ் செய்யப்பட்டது.

(5) அடுத்த 7—7—18ல் கூடப்போகும் சபையை கனம் அ. மா. வீரப்பநாடார் அவர்களே உறைவின் முறையார்களுக்கு நோட்டீஸ் மூலமாய்த் தெரிவித்து சபைகூட்டிவைக்கவேண்டு மென்றும் தீர்மானிக்கப்பட்டது

(இத்துடன் ஆரவாரத்துடன் சபை கலைந்தது).

சென்ற ஆனிமீ 23வயில் சபைகூடி அடியில்கண்ட தீர்மானங்கள் செய்யப்படலாயிற்று.

முன்நடந்த சபையில் கட்டிடவாடகையை நிர்த்தாரணஞ்செய்ய நியமித்த கமிட்டியார்கள் அவர்களுடைய ரிப்போர்ட்டை ஆஜர்படுத்த இன்னும் ஒருவார வாயிதாவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் ஷை கமிட்டியார்களுக்கு பின் 32வயில் கூடப்போகும் சபையில் ரிப்போர்ட்டை ஆஜர்ப்படுத்தும்படிக்கும் ரெகுலேஷனை தாயார்செய்ய நியமித்த கமிட்டியார்களும் அடுத்த 32வயில் கூடும் சபையில் ரெகுலேஷனை ஆஜர்ப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானஞ்செய்து சபை கலைந்தது.

சென்ற ஆனிமீ 32உயில் சபைகூடி அச்சபைக்கு கனம் அரி. அ. சுப்பயநாடார் அவர்களை பிரசிடெண்டாக நியமனஞ்செய்து அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டது.

(1) முன்கூடிய சபைகளில் வாடகை நிர்த்தாரணஞ்செய்வதற்காக நியமனஞ்செய்த கமிட்டியார்கள் இந்தச்சபையிலும் அவர்கள் ரிப்போர்ட்டை ஆஜர் செய்யாததால் புதிதாய் நாலு பெயர்களடங்கிய கமிட்டி நியமனஞ்செய்யலாயிற்று.

(2) ஷை கமிட்டியார்கள் வாடகை நிர்த்தாரணஞ்செய்வதோடு வாடகைப்பாக்கிதார்களின் லிஸ்டு ஒன்று அவரவர்கள் வரவேண்டிய பாக்கிவிபரத்துடன் தயார்செய்து அடுத்துக்கூடும் 21—9—18 சபையில் ஆஜர்ப்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(3) முதல் இரண்டு வருஷத்திற்கு நிர்வாக சபையோராக அடியிற்கண்ட மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

1. பிரசிடெண்டு கனம் அ. மா. வீரப்பநாடார் அவர்கள்.
2. வைஸ்பிரசிடெண்டு கனம் தொ. ம. ச. மதலைநாடார் அவர்கள்.
3 செக்ரடெரி கனம் மா. வே சண்முகவேல் நாடார் அவர்கள்.
4. ஜாயிண்ட்—செக்ரெட்டெரி சிவ. பெ. ராமலிங்கநாடார் அவர்கள்.
5. பொக்கிஷதார் கனம் ஆ. யி. ஆ. ஆறுமுகநாடார் அவர்கள்.

மெம்பர்கள்.

6. கனம் அரு. சு. சிதம்பரநாடார் அவர்கள்.
7. கனம் அரி. அ. சுப்பைய நாடார் அவர்கள்.
8. கனம் அ. துரைசாமிநாடார் அவர்கள்.
9. கனம் ச. ஆவுடைநாதநாடார் அவர்கள்.
10. கனம் வ. சி. வ. சிவசங்கரநாடார் அவர்கள்
11. கனம் அ. வி. ஆறுமுகப்பெருமாள்நாடார் அவர்கள்
12. கனம் மு. மு. வெ. முத்தையநாடார் அவர்கள்.

ஆகிய இவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.

(4) தயாராகிவந்த ரெகுலேஷன் சபையில் படிக்கப்பட்டு சகலராலும் அங்கீகரிக்கப்பட்டு ஷை ரெகுலேஷனை ரிஜிஸ்டர் செய்வதற்காக சுத்தப்பிரதிதயார்செய்து அச்சுப்போட்டு சகல மெம்பர்களிடமும் கையொப்பம் வாங்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

(இத்துடன் சபை கலைந்தது).

---



## விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியாசாலை.

**சகோதரர்களே!**

நான் தங்களுக்கு யுக்திசொல்வது "மதியின்முன் மின்மினிபோல், ஆனாலும்" "சலதாரைவிழுநீரும் சாகரம் தன்னைச்சார்ந்தால் குலமென்றே கொள்ளுமல்லால் குறைகடல் வெறுப்பதுண்டோ" வெறுக்காதல்லவா அதைப்போன்றே பேரறிவினரான உங்களுக்கு சிற்றறிவினனாகிய நான் கூறியவற்றால் பலவழுச்சொற்களிருப்பினும் அதற்றை தங்கள் குழந்தைகளின் மழலைச்சொல்லாகக்கருதி அகங்களிப்பீர்களென்னும் தைரியத்துடன் எழுதியிருப்பதால்" நீரொழிய பாலுண்குருகிற்பாற்று" என்றபடி குணத்தை கொள்ளும்படி பிரார்த்திக்கிறேன்.

தற்சமயம் நம்மவர்கள் விருதுபட்டி, சிவகாசி, பட்டிவீரன்பட்டி முதலான இடங்களில் ஆரம்பக்கல்வியும் நடுத்தரக்கல்வியும்படிக்கச்செய்வது யாவராலும்விரும்பப்படுவதொன்றே.

ஆயினும் இதிற் திருத்தவேண்டிய குறைகள் சிலவுள்ளனவென்று கூறுதல்மிகையாகாது தற்போதுவிருதுபட்டிக்ஷத்திரிய வித்தியாசாலையில் சம்பளமின்றி வைத்து படிக்க வைக்கிறார்கள் இது சிலாக்கியமே யாயினும் இதில் சிலநிபந்தனைகள் ஏற்படுத்தவேண்டும் அவையாவன.

தன்குழந்தைகளை கற்கவிடும்(தகப்பனாரும்)கார்டியன்களும் மாணாக்கர்களும் பிரபுவானாலும் ஏழையானாலும் எந்தசாதியானாலும் சரி ஸ்கூல் மானேஜருக்கு விண்ணப்பமூலமாய் கேட்டுக்கொள்ளவேண்டும்.

விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிற, கார்டியன்களுக்கும் (மாணாக்கர்களுக்கும்) வகுப்பு முடியும்வரை வாசிப்பதாயிருந்தால் மட்டும் சம்பளம் கிடையாதென்றும், வகுப்பு முடியும்வரையும் வாசித்தால்தான் ஸ்கூலில் இடங்கொடுக்கப்படுமென்றும், இடையில் பள்ளிக்கூடத்திற்கு வராவிட்டால் சம்பளத்தை இரட்டிப்பாக வசூல்செய்யப்படுமென்றும் மேற்கண்டநிபந்தனைக்கு சம்மதமிருந்தால் மட்டும் அக்ரிமெண்டு எழுதிக்கொடுத்து

பள்ளிக்கூடத்துக்கு வரலாமென்றும், தயவினால் பள்ளிக்கூடத்துக்குவர இடங்கொடுக்கப்படமாட்டாதென்றும் தெரியப்படுத்தி இணங்கியவரைமட்டும் சேர்த்துக்கொள்ளவேண்டும். மேற்கண்டமுறைகளையே மற்ற ஸ்கூல்களுக்கும் ஏற்படுத்தினால் நம் நாடார் சமூகத்தவர்களின்முன்னேற்றத்துக்கு சாதனமாயிருக்கும் தற்சமயம் விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியா சாலையும் சிவகாசியில் விக்டோரியா ஹைஸ்கூலும் பட்டிவீரன்பட்டியில் நாடார் சரஸ்வதி வித்தியாசாலையும் ஏற்படுத்தி பல்லாண்டுகளாகியும் அதில்படித்த மாணாக்கர்களோ பல்லாயிரக்கணக்காயிருந்தும் வகுப்பு முடியும் வரை வாசித்த மாணவர்களோ ஒருநூற்றுக்கு குறைவென்றே சொல்லவேண்டும் மேற்கூறிய முறைகளை அநுஷ்டித்தால் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் 1, 2, 3, 4, 5,6. வரை வாசிப்பதைக்காட்டிலும்சில ஆயிரமாணாக்கர்களாவது வகுப்பு முடியும் வரை வாசித்திருப்பரென்பது வெள்ளிடைமலைபோல் தெற்றெனப்புலப்படவில்லையா.

இதுவரை, வாசித்த, பிள்ளைகளில் உயர்தரக் கல்வி கற்றவர் (பி. ஏ. பி எல் எம். ஏ).எத்தனைபேரென்று கணக்குபார்த்தால் நமக்குவெட்கமாயிருக்கவில்லையா? அந்தோநம்செய்கை 'தாய் தவிட்டுக்கு அழ, தம்பி கும்பகோணத்தில் கோதானம் செய்கிறான்" என்பதைப்போலவன்றோ யிருக்கிறது தன்மானம் குலமானம் காத்துக்கொண்டல்லவோ மற்றவரை காப்பாற்றவேண்டுமென்பது நீதி நம்மவர்களுக்கு உண்மையை எடுத்துக்காட்டினால் துறந்த ஞானிகள்போல் பேசுகிறார்கள்.

வெறும்பேச்சால்பலனென்ன ஒன்றுமேயில்லை, என்பதையறிந்து செய்கையால் காட்டவேண்டும் ஒவ்வொருகாரியத்தையும் ஊன்றிநோக்கி செய்தல் வேண்டுமேயல்லாது மேல்போக்காய்ச் செய்வதால் ஒருபிரயோஜனமும் கிடையாது கவனித்துக்குற்றமிருப்பின் ஞானோதயவாயிலாக, நேயர்களின் அபிப்ராயத்தை எதிர்பார்க்கிறேன் சர்வ வல்லமையுள்ள ஜெகதீசன் இன்னருள் புரிந்து நம்மெல்லோரையும் ரக்ஷிப்பாராக.

ஆண்டிபட்டி க்ஷத்திரிய மித்திரன்.



நமது நிரூபர்" வகுப்புமுடிய " என்று பிரயோகித்திருக்கும் இடங்களிலெல்லாம், அந்தந்தப்பள்ளிக்கூடங்களிலுள்ளமேல்வகுப்புமுடியவென்று நமது நேயர்கள் அர்த்தம்பண்ணிக்கொள்ள வேண்டும். நிற்க இச்சந்தர்ப்பத்தில் விருதுபட்டி க்ஷத்திரிய வித்தியாசாலையில் நமது ஜாதி மாணவர்களுக்குமட்டிலும் சம்பளமன்னியிலும், இதர ஜாதிமாணவர்களுக்குச் சம்பளமும் ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று எடுத்துச் சொல்வது பொருந்தும்

[ப—ர்]

## கடம்பூர் நாடார் கல்விச் சங்கம்.

(திருநெல்வேலி ஜில்லா) 15—7—18.

7-வது ஆண்டு 21-வது மீட்டிங்:- இச்சங்கமானது வழக்கம்போல் ஸ்ரீ யம்பிகை மாரியம்மாள் கோவில் முன் மண்டபத்தில் சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதி ஸ்ரீமான். க. சு. த. ராமலிங்கநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் மாலை 7-மணிக்கு கூடிய சபையில் கனம். சங்கரகுமார ஓதுவார் கடவுள்வாழ்த்துக் கூறியவுடன் அம்பலம், சி. தவசிப்பெருமாள் நாடார் " இராஜநீதியைப் பற்றியும்" பெ. ராமசாமி நாடார் " கல்வி" என்பதை பற்றி நம் சிறுவர், சிறுமிகள் கட்டாயம் படித்துவரவேண்டியதற்காக ஸ்ரீமான். க. அ. ராம. மகாலிங்கநாடார் அவர்கள் சொந்தப் பண்டிலிருந்து நடத்திவருகிற "நாடார் ஜியார்ஸ். ஸ்கூலுக்கு 7 ஏக்கர் நிலம் வாங்கி அதில் ரூ 5000 செலவுசெய்து கட்டிடம் கட்டி அதற்கு ரூ 10000 பண்டுஏற்படுத்தி பாலர் முதலாவது வகுப்புவரை இலவசமாகவும், 7-வது வகுப்புவரை நடத்திவருகிறார். இந்த ஸ்கூலில் படித்த பிள்ளைகள் தூத்துக்குடி, மதுரை காலேஜ்களில் 8-வது வகுப்பில் சேர்ந்து படித்து வருகிறார்கள். படிப்பு விஷயமாக இவ்வளவு சகாயம் செய்திருந்தும் அநேகம் பிள்ளைகள் ஒட்டுத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படிக்கிறார்கள் இனிமேலாவது நமது சொந்த ஸ்கூலில் படிக்கவரும்படி யேற்பாடு செய்யவேண்டியது. பெண்களுக்குத் தனிமையாக மகமை பண்டிலிருந்து ஸ்கூல் திறக்கவேணுமென்பதாக கனம், சு. ராம. ராமலிங்கநாடாரவர்கள் வாக்களித்திருக்கிறார்கள் கூடியசீக்கிரம் பெண்பாடசாலை திறப்பார்கள் நமது சிறுவர் சிறுமிகள் கட்டாயம் படித்து வரவேணுமென்பது யாவர்கள் மனதிலும் பதியும்

படியாக பேசினார். அதன்பின், கனம். ஆ. ச. ஷண்முகநாடார் அவர்கள் "முயற்சி" என்பதைப்பற்றியும் கு. பொன்னுச்சாமி நாடார் "அப்பூதி நாயனார்" சரித்திரத்தைப் பற்றியும் சபாநாயகரவர்கள் "ஆள்வினை யுடைமை" என்பதைப்பற்றி முடிவுரை பேசி முடித்தவுடன் செக்ரடெரியால் சபாநாயகரவர்களுக்கும் விஜயம்செய்த கனவான்களுக்கும் சபையோர்களுக்கும் வந்தனம் செலுத்தி இராஜவாழ்த்து பாடி மங்களமாக 11-மணிக்கு சபை நிறைவேறியது.

சீ. தவசிப்பெருமாள் நாடார்.

---

## யுத்தக் குறிப்புகள்.

சமீபகாலத்தில் எந்தப் போர்முனையிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஒன்றும் ஏற்படவில்லை யெனத்தெரிகிறது. பெல்ஜிய போர்முனையில் நமது பிரிட்டிஷ் படைகள் முன்னேறி ஒரு முக்கியமான ஸ்தலத்தையும் மெஷின் பீரங்கிகளையும் கைப்பற்றிக்கொண்டதோடு அநேகம் பேர்களை சத்துருக்களிடமிருந்து சிறையும் பிடித்திருக்கிறார்கள்.

பிரஞ்சுப்போர் முனையில் அசாதாரணமான அமைதி ஏற்பட்டிருக்கிறது. இவ்வித அமைதியானது சந்தேகத்தை யுண்டு பண்ணக்கூடியதாயிருக்கிறதென்றும் தற்போது சத்துருக்கள் ஆயுதங்களையும் தளவாடங்களையும் ஏராளமாய்ப்போர்முனைக்கு கொண்டுவந்து சேர்க்கின்றார்களென்றும், அப்படிச் சேகரஞ் செய்யும் இடங்களில் நமது படைகளை பதிலுக்குப்பதில் எதிர்க்காமலிருக்கின்றார்களென்றும். சிலவாரங்களாக பாரிசின்மீதும் ஆமீன்ஸ் நகரத்தின்மீதும் சத்துருக்கள் பிரங்கிப்பிரயோகம் அடியோடு நிறுத்தப்பட்டிருக்கின்றதென்றும், இதிலிருந்து சத்துருக்கள் வெகுபலமாய்த்தாக்க முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்களென்று எண்ணுவதா? அல்லது அவர்களின் நிலைமை பிரதிகூலமாயிருக்கிறதென்றெண்ணுவதா? என்பது தெரியவில்லையென்றும் யுத்தநிபுணர்கள் கூறுகின்றார்களாம். தற்போது இவ்விடத்தில், 225,000 பேர்கள் கொண்ட மூன்று அமெரிக்கன் படைகள் இருப்பதாயும் இன்னும் ஏராளமான துருப்புகள்



210787

அமெரிக்காவிலிருந்து பிரான்சுக்கு இடைவிடாது அனுப்பப்பட்டும் வருகின்றனவாம்.

இட்டாலியப் போர்முனையில் ஆஸ்டிரியர் தோல்வியடைந்து கொண்டு வருவதாயும் ஆஸ்டிரியருக்கு ஜெர்மானியர் பின்பலம் அனுப்பி உதவிசெய்கின்றதாயும் தெரிகிறது.

ருஷியாவின் நிலைமை மிகவும் கேவலமடைந்து கொண்டுவருகிறது மாஸ்கோவா நகரம் முற்றுகையிடப்பட்டிருப்பதாயும் கலகக்காரர்களை யடக்க கவர்ன்மெண்டினால் முடியவில்லை என்றும் சொல்லபடுகிறது. பீட்ரோகிராட்டில் பஞ்சம் அதிகரித்திருப்பதோடு வாந்தி பேதியும் அதிகரித்திருப்பதாயும் இவ்வியாதியினால் அநேகர்கள் பீடிக்கப்படுவதாயும் தெரிகின்றது.

---

## பொதுவிஷயங்கள்.

விநாடி யொன்றுக்கு 555 குண்டுகள் விடுக்கக்கூடியதும், பல்லாயிர கெஜ தூரத்துக்கப்பாலுள்ள ¾ அங்குல இரும்புத் தகடுகளை காயிதம்போல் துளைக்கக்கூடியதுமான பீரங்கியை ஓர் அமெரிக்கர் கண்டுபிடித்திருக்கின்றனராம்.

* * * *

ஆகாயத்தில் இதுவரை யில்லாத ஒரு புதிய நக்ஷத்திரத்தை வான சாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரத்தில் உலக நிலைமையில் பிரமாதமான ஒரு மாறுதல் ஏற்படுமென்று அவர்கள் எதிர் பார்க்கின்றார்களாம்.

* * * *

கொழும்பில் பேஜ அம்மாள் என்ற ஸ்திரி ஒரே கர்ப்பத்தில் 4 குழந்தைகள் பெற்றிருக்கின்றனர். அந்த அம்மாளுக்கு வயது 41. பிள்ளைகள் 15 இருக்கின்றன. இருமுறை இரட்டைப் பிள்ளைகள் பெற்றனர். பிரஸ்தாப பிரசவத்திற்கு முந்திய கடைசிப் பிரசவத்தில் பெற்ற பிள்ளையின்வயது 14 மாசம் என்று கொழும்பு ஜனமித்திரன்பத்திரிகை கூறுகின்றது.

* * * *

பிரபஞ்சத்தில் மொத்தம் 3664 பாஷைகள் பேசப்படுகின்றன. கண்டங்கள் வாரியாய்ப் பார்ப்போமானால் ஐரோப்பாவில் 587; ஆசியா 937 ஆப்பிரிக்கா 276; அமெரிக்கா 1624; ஆஸ்திரேலியா முதலிய பசிபிக் மகா சமுத்திர தீவுகள் 240; ஆங்கில பாஷை 100கோடி ஜனங்களாலும் மற்ற

பாஷைகள் குறைந்த தொகையினராலும் பேசப்படுகிறது. ஆகையால் ஆங்கிலமே இந்தியாவுக்கேற்ற பொது பாஷை யென்று ஓர் ஆங்கிலோ இந்தியப்பத்திரிகை தர்க்கம் செய்கின்றதாம்.

* * *

ஸர் S. P. சின்ஹா பீகார் ஒரிசா மாகாணங்களுக்கு கவர்னராக நியமனம் பெறுவாரென்று வதந்தியுண்டாயிருக்கிறது. இதன் உண்மை போகப் போகத்தான் தெரியவேண்டும். அப்படி ஒருக்கால் நியமிக்கப்படுவாரானால் இந்தியருக்கு கவர்னர் பதவி கொடுப்பது இதுதான் முதல் தடவையாகும்.

* * * *

துருக்கி சுல்தானாயிருந்த ஐந்தாவது முகம்மது காலஞ்சென்றுவிட்டார். அவருடைய சரீரம் எயுப்மசூதியில் அடக்கம் செய்யப்பட்டது. வஹீத்-எத்-தீன் எனபவர் துருக்கி சுல்தானாக பட்டஞ்சூட்டப்பட்டிருப்பதாய்த் தெரிகிறது.

* * * *

மிஸ்டர் மாண்டேகு லார்டு செம்ஸபோர்டு இவர்கள் தயார்செய்திருக்கும் இந்திய அரசியல் திருத்தங்களைப்பற்றி பெரும்பான்மை இந்தியப் பத்திரிகைகள் சிறுபான்மை ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் கண்டித்தும் சிறுபான்மை இந்தியப் பத்திரிகைகள் பெரும்பான்மை ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள் ஆதரித்து மெழுதுகின்றன. பொதுவாய் நோக்குமிடத்தும் அத்திட்டங்கள் இந்தியருக்கு அதிருப்தியை தரத்தக்கனவைகளாகவேயிருக்கின்றன.

---

## சிவகாமிசுந்தரி.

ஓர் நவீன தமிழ்க்கதை.

### நமது சிற்றன்னை கொடியவளல்லள்.

(96-ம் பக்கத் தொடர்ச்சி.)

"நான் என்னுடைய அழகிய நகைகளுக்காக மாத்திரம் அழவில்லை. நமது சின்னம்மாள் திடீரென இறந்ததையும் அவளை அநாதையாகத் தகனஞ்செய்ததையும், நீங்களும் அவனும் இல்லாதவேளையில் திருடர்கள் வீட்டில் நுழைந்ததையும் நினைக்க நினைக்க என் மனதிலெழும் துக்கத்தை என்னால் அடக்கக்கூடவில்லை." என நெட்டுயிர்ப் புற்றனள் சகோதரி.

அழாதேயம்மா! வருவது வந்தேதீரும். அதற்கு நாம் என்ன செய்யலாம் என்றவாறு தன் தங்கையைத்தேற்றிப் பின்பு "நான் சந்திரபுரிக்குப் போகும்பொழுது சம்பூரண சௌக்கியத்தோடிருந்த சின்னம்மாள் திடீரென எப்படி இறந்தாள்?" என வினவினன் லோசனன்.



"நீங்கள் சந்திரபுரிக்குப்போன மறுநாள், அதாவது சென்ற சனிக்கிழமை காலையில் வழக்கம்போல் சுமார் ஐந்து மணிக்குச்சின்னம்மாள் கேணிக்குப்போய் ஸ்நானம் செய்து வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். அன்று பதினொரு மணிவரையில் அவள் கேணியிலிருந்து திரும்பிவரவில்லை. ஆகையால் நான் ராதையைக் கேணிக்கனுப்பினேன் அவள் திரும்பி வீட்டுக்குவந்து சின்னம்மாளைக் கேணிக்கரையில் காணவில்லை என்று சொன்னாள். சுமார் ஒருமணி நேரத்திற்குப் பிறகு வைத்தியர் வீட்டம்மாள் நமது வீட்டுக்கு வந்தாள், என்னைக்கண்டவுடன் கண்ணீர் வடித்துக்கொண்டு "அம்மா! உன் சின்னம்மாள் உன்னைவிட்டுப் போய்விட்டாளே!" என்று சொல்லி விக்கினாள். நான் பெருந்திகிலடைந்து "என்னம்மா! சின்னம்மாள் எங்கே போய்விட்டாள்?" என்று கேட்டேன் அதற்கவள் "இன்று காலையில் ஆறுமணிக்கு வைத்தியர் கேணிக்குப் போயிருந்தார். அப்பொழுது கேணிப்பக்கத்திலிருக்கும் தோப்பிலுள்ள ஒரு புளியமரத்தில் கட்டிய ஒரு கயிற்றுச்சுருக்கில் உன் சிற்றி தன் கழுத்தை மாட்டித் தொங்கிக் கொண்டிருப்பதைக்கண்டு, உடனே, தன்னிடம் அதிக விசுவாசமுள்ள இரண்டு மூன்று ஆட்களுக்கு அந்த விஷயத்தைத் தெரிவித்து அவர்களுடைய உதவியால் உன் சின்னம்மாளை ரகசியமாய்த் தகனஞ்செய்துவிட்டு இந்த விஷயங்களை யெல்லாம் உனக்குச்சொல்லும்படி என்னை அனுப்பினார். அவரும் இன்னும் சற்றுநேரத்தில் இங்கே வருவார்." என்று சொன்னாள். அண்ணா! அப்பொழுது என் மனம் எப்படிப் பதைத்திருக்குமென்று நீங்களே யோசித்துப்பாருங்கள், தாயற்ற தந்தையற்ற நாம் நம்மோடு அன்பாய் வசித்துவந்த சின்னம்மாளையும் இழந்து தனிமையாயிருப்பதை நினைக்கநினைக்க என்மனம்பதறுகிறது." என்று கூறிப் பெண்மணி பெருமூச்செறிந்தாள்.

லோசனன் தன் பிரிய சகோதரி துயருறுவதைக் காணச் சகியாது விழிகளில் ஜலத்துடன், "கண்மணீ! நீ நமது தாயார் தகப்பனார் சிறிய தகப்பனார், இவர்களுடைய மரணத்தை நினைத்துத் துக்கப்படுவது சரி. ஆனால், ஒருபேதைப்பெண்ணை என்றுந் துக்கக்கடலில் அமிழ்த்த எண்ணித் தன் எண்ணம் நிறைவேறாததால் தற்கொலைசெய்துகொண்ட சின்னம்மாளை மறந்துவிடு. இப்பொழுது என் கண்களில் ஜலம் பெருகிக்கொண்டிருப்பதற்குக் காரணம் உன் துயரமே அல்லாமல் நமது சின்னம்மாளது மரணமல்ல" என்றனன்.

"எவ்விஷயத்தையும் நன்றாய் ஆராய்ந்தறியாமல் நமது சின்னம்மாளைப்பற்றி என் அண்ணா இப்படிப் பேசுகிறீர்கள். ஐயோ அவள் நம்மிடம் கொண்டிருந்த அன்பே அன்பு" என்று சுந்தரன் சகோதரி அவன் முகத்தை உற்றுநோக்கி யுரைத்தனள்.

"நான் ஆராய்ந்தறியாமல் ஒன்றுஞ்சொல்லவில்லை. நமது சின்னம்மாள் ஓர் பெண்ணைத் துக்கக்கடலில் தள்ள நினைத்தாள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆகையால் அவள் கொடியவள். அவளைப்பற்றி——
——என்றனன் சகோதரன்.

"அவள் அப்படி நினைத்தாளென்று உங்களுக்கு எப்படித் தெரியும்"? என வினவினள் தங்கை.

"அவள் ஏன் தற்கொலை செய்துகொண்டாளென்று உனக்குத் தெரியுமா?" என்றனன் லோசனன்.

"தெரியாது." என்றனள் நங்கை.

"பேதையே! நான் சொல்வதைக் கவனமாய்க்கேள். காமன் பத்தினியைப்பழித்த அழகும் சகல கல்யாண குணங்களும் சிறந்த கல்வியறிவுமுடைய ஒரு பெண்ணை பரமதுஷ்டனொருவனுக்கு விவாஹஞ்செய்விக்க எண்ணினள் கொடியவளாகிய நமது சின்னம்மாள். அவ்வெண்ணத்தை அவள் என்னிடம் வெளியிட்டு எப்படியேனும் அவள் விருப்பத்தை நான் நிறைவேற்ற வேண்டுமென்று பிடிவாதமாய்ச் சொன்னாள். ஆனால் என்னுடைய மனத்திடத்தினால் அவள் எண்ணம் நிறைவேறாமற் போகவே அந்த நீலி மனநொந்து தற்கொலையால் தன்னுயிரைப். போக்கிக்கொண்டாள். அந்த நீலியை நினைத்துத் துக்கப்படாதே." என்றனன் சுந்தரன்.

சகோதரி நீர் நிறைந்த விழிகளுடன் "அண்ணா! அவள் நம்முடைய சின்னம்மாளல்லவா? உங்களுடைய இரத்தமும் என்னுடைய இரத்தமும் அவள் சரீரத்தில் கலந்திருப்பதை யோசித்துப்பாருங்கள்." என்றாள்.

"கண்மணீ! உன் இரத்தமும் என் இரத்தமும் அந்த நீலியின் சரீரத்தில் கலந்திருப்பது மெய்தான். ஆனால் "உடன் பிறந்தார் சுற்றத்தாரென்றிருக்கவேண்டா உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்ற ஔவையின் வாக்கும் மெய்தான்." என்றனன் லோசனன்.

"ஔவை வாக்கு சத்தியவாக்குத்தான். ஆனால் நமது சின்னம்மாள் நம்மிடம் வைத்திருந்த அன்பை நீங்கள் அறிந்திருந்தும் நீங்கள் அவளைக் கொடியவளென்று சொல்லுகிறீர்களே. அவள் கொடியவள் என்று சிறிதும் நம்பக்கூடவில்லை. அவள் எந்தப் பெண்ணைத் துக்கக்கடலில் தள்ள நினைத்தாள்?" என்றனள் சகோதரி.

"என்றுமேயிருக்கும் கண்மணியாகிய பெண்மணியைத் தான்." என்றனன் லோசனன்.

(தொடரும்.)

க. அ. சுப்பராயபிள்ளை.

210787

## சந்தா நேயர்களுக்கு ஓர் அன்பான விஞ்ஞாபனம்

மகா யுத்தகாரணமாக காகித விலை, அச்சுக்கூலி முதலியன அதிகரித்திருக்கிற இக்காலத்தில் புதிதாகத் தொடங்கிய நமது "ஞானோதயம்" போன்ற பத்திரிகைகளை நடத்துவது எவ்வளவு செலவையும் சிரமத்தையும் பொறுத்ததாயிருக்கு மென்பது நமது அன்பார்ந்த சந்தா நேயர்கள் அறிந்த விஷயம். சந்தாதார்களின் பெருக்கமே நமது நிர்வாகத்தைச் சாத்தியப்படுத்துவதாகும். ஆகையால் நமது அன்பார்ந்த சந்தா நேயர்கள் ஒவ்வொருவரும், தங்கள் பந்து மித்திரர்கள் பலரையும் சந்தாதார்களாகச் சேரச்செய்து நமது "ஞானோதயம்" என்னும் இளங் குழவிக்குப் பசு, பட்சி, பாலக்கிரகணை முதலிய பாலாரிஷ்டம் யாதும் சற்றும் அணுகாது பாதுகாத்து ஆதரிக்குமாறு பன்முறையும் வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறோம்.

## விஷயமெழுதுவோர்க்கு விசேஷ அறிக்கை.

எழுதியோர் உண்மைப் பெயரும் முழுவிலாசமுமில்லாது அடியில் புனைபெயர் மாத்திரமிட்ட சில வியாசங்கள் நமக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளை எழுதியோர் தங்கள் முழு விலாசமும், உண்மைப் பெயரும் தெரிவித்த பின்னரே அவைகள் பிரசுரிக்கப்பெறும். வியாசங்களைப் புனைபெயரோடு மாத்திரம் பத்திரிகையில் பிரசுரிக்க உடன்படுகிறோம். ஆனால், எழுதியோர் உண்மை பெயரும் முழுவிலாசமும் நமக்கு அறிவிக்கப்படவேண்டு மென்பதை விஷயதானிகள் கவனிப்பார்களாக.

ப—ர்.